Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

English Academy

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Email: thangan 672002 @ yahoo.com
T.P. - 021-2222588

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



பிரதான வீதி, சித்தன்கேணி.

Enrol your Children for Better results
சிறந்த பெறுபேற்றுக்கு
உங்கள் பிள்ளைகளை சேருங்கள்

(சி-474)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 26 (30.01.2003) வியாழக்கிழமை இதழ் : 121

## தலைவர் பிரபாவின் பாராட்டு



கரைதேடும் ஓடங்கள் நாடகத்தில் சிறப்பாக நடித்த கலைஞர் யோ. விக்னேஸ்வரிக்கு தேசியத்தலைவர் பிரபாகரன் பாராட்டி பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். நேற்று இந்நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெற்றது.

# இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு பிரித்தானிய அரசாங்கம் நம்பிக்கை


## கொழும்பு வந்த அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் உறுதி

இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வொன்று ஏற்படுமென பிரித்தானியா நம்பிக்கை கொண்டுள்ளதாக கொழும்பிற்கு வந்துள்ள பிரித்தானிய வெளியுறவு செயலர் மைக் ஓ ப்ரெய்ன் தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்ற விசேட கருத்தரங்கொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசியல் கட்சித்தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் விமர்சகர்கள், பிரமுகர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

அங்கு உரையாற்றிய மைக் ஓ ப்ரெய்ன் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான பரஸ்பர நம்பிக்கைகள் மேலும் கட்டியெழுப்பப்பட வேண்டும்



பிரித்தானியாவின் அயர்லாந்துப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது போல் இலங்கை இனப்பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியும். பேச்சுவார்த்தைக்கு பிரித்தானிய அரசாங்கமும் உதவி வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் புனரமைப்பதற்கும் புனர்வாழ்வுப் பணிகளை (10 பக்கம் பார்க்க)

# இந்தியாவிலிருந்து கப்பலில் வந்த 500 மெற்றிக் தொன் அரிசி மாயம்!

## விண்ணாணம் விநாசியர்



சனத்துக்கு வந்த அரிசியிலையும் ஏப்பம் விடுற புண்ணியவான்கள் ஆரப்பா...?

## நிவாரணத்திற்கு வந்தது எங்கே போனது?

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் நிவாரண விநியோகத்திற்கென இந்தியாவில் கொள்வனவு செய்யப்பட்டு, கப்பலில் ஏற்பட்ட அரிசியில் 500 மெற்றிக் தொன் மாயமாக மறைந்துவிட்டது.**

ஜனவரி மாத நிவாரண விநியோகதத்திற்கென இந்தியாவிலிருந்து புனர்வாழ்வு அமைச்சினால் சுமார் இரண்டாயிரம் மெற்றிக்தொன் அரிசி கொள்வனவு செய்யப்பட்டு கப்பலில் ஏற்றப்பட்டது. இக்கப்பல் நேரடியாக பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு வந்தது.

இது தொடர்பான ஆவணம் ஒன்றும் யாழ்.அரச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இவ் ஆவணத்தின்படி 2 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி மேற்படி கப்பலில் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக் (10 பக்கம் பார்க்க)

# போரால் கைமாறிய சொத்துக்கள் மீளப்பெறுவதற்கு கருத்தமர்வு

## சிறான் அலுவலகத்தில் நேற்று நடந்தது

(கிளிநொச்சி)

போரால் கைமாறிய சொத்துக்களை உரியவர்கள் தமக்குரியதாக்கி கொள்வது தொடர்பான கருத்தமர்வு நேற்று கிளிநொச்சி சிறான் தலைமையகத்தில் நடைபெற்றது.

போரால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் தமது சொத்துக்களை இழந்த மக்கள் அவற்றைச் சட்ட ரீதியாக தமக்குரியதாக்குவதற்கான வழிவகைகள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

இதில் தமிழீழ நீதித்துறையினர், அரசியற்துறை பிரதிநிதிகள், வட- கிழக்கிலுள்ள சகல மாவட்டங்களிலும் உள்ள உதவி அரசாங்க அதிபர்கள், காணி அதிகாரிகள், நில அளவைத் திணைக்கள அதிகாரிகள், அரச சட்டவாளர்கள், நீதிவான்கள் மற்றும் அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களின் நீதிவான்கள் இதில் கலந்து கொண்டனர்.

அகதிகளுக்கான ஐ.நா உயர் ஆணையக கொழும்பு தலைமையகமும், கொழும்பை மையமாகக் கொண்டியங்கும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமும் இதனை ஒழுங்கமைத்திருந்தன.

மக்களின் சொத்துக்கள் இடம்பெயர்வுகளால் மாற்றார்களின் கைகளில் சென்றுள்ளதாலும் உரித்துடையோர் தமதாக்குதலில் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது பற்றியும், கண்ணிவெடிகளை அகற்றி நிலங்களை அவர்களுக்கு உரியதாக்குவது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. (10 பக்கம் பார்க்க)

# பல்கலை துணைவேந்தர் தேர்தல் பேராசிரியர் குமாரவடிவேல் முதலிடம்

## சிற்றம்பலம், மோகனதாஸ் அடுத்த இடங்களில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கான வாக்கெடுப்பு நேற்று மாலை 5 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இந்தப் பதவிக்குப் போட்டியிட்ட ஒன்பது பேரில் கூடிய வாக்குகளைப் பெற்ற மூவர் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி ஆர்.குமாரவடிவேல் 62 வாக்குகளைப் பெற்று முதலாவதாகத் தெரிவானார். யாழ்ப்பாண பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி சி.க.சிற்றம்பலம் 58 வாக்குகளைப் பெற்று இரண்டாவதாகவும் (10 பக்கம் பார்க்க)

# ஏ-9 வீதியை மூடாமலேயே பாதையைத் திருத்தத் திட்டம்

ஏ-9 வீதியைத் திருத்துவது தொடர்பான முக்கிய கூட்டமொன்று இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

ஏ-9 வீதியை மூடாமலேயே திருத்த வேலைகளைச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. திருத்த வேலைகளின்போது பாதையின் அரைவாசிப் பகுதியைப் போக்குவரத்துக்காக திறந்து விடுவது எனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது 4.4 மீற்றராக உள்ள ஏ-9 வீதியின் அகலம் 7 மீற்றராக (10 பக்கம் பார்க்க)

# சொந்த இடங்களில் குடியமராதோருக்கு 25 ஆயிரம் ரூபா நிதியுதவி கிடைக்காது!

## மீளக்குடியமர வருவோருக்கு இன்னொரு நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தமது சொந்த இடங்களுக்கு சென்று மீளக்குடியமராத- இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஏ-9 பாதை ஊடாக வன்னியிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் யாழ்.மாவட்டத்துக்குத் திரும்பியுள்ளனர். இவர்களில் அநேகமான குடும்பங்கள் இன்னமும் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பவில்லை.

உயர்பாதுகாப்பு வலயம் மற்றும் இராணுவத்தினர் பயன்படுத்தி வரும் வீடுகளிலுள்ள குடும்பங்கள் தற்காலிகமாக வேறு இடங்களிலுள்ள தமது (10 பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
J/F 021 - 2223916, 0777 - 517019
(சி-518) 01-505632, 074-612656, 01-390128

# ஆப்கான் மலைப் பகுதிகளில் அமெரிக்க படைகள் தாக்குதல்

## குண்டு வீச்சு விமானங்களும் உதவிக்கு அழைப்பு



தலிபான்களைத் தேடும் அமெரிக்கப் படையினர்

(காபுல்)

ஆப்கானிஸ்தான் மலைப்பகுதிகளில் நூற்றுக்கணக்கான அமெரிக்கப் படையினர் போராளிகளுக்கு எதிரான தாக்குதல் ஒன்றை நடாத்தியுள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இத்தாக்குதலில் பதினெட்டு போராளிகள் கொல்லப்பட்டனர். இவர்கள் தற்பொழுது ஆப்கானிஸ்தானில் இயங்கும் அமெரிக்க ஆதரவு அரசாங்கத்திற்கு எதிராகப் போராடி வருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிராக பெரும் எடுப்பில் நடைபெற்ற யுத்தத்தின் பின்னர், கடந்த ஒன்பது மாதங்களில் நடந்த பெரிய தாக்குதல் இது என அமெரிக்கப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலின்போது யுத்த விமானங்களும் களமுனைக்கு அழைக்கப்பட்டு குண்டுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. தாக்குதல் நடை



தேடுதலில் ஈடுபடும் கேணல் ரோஜர் கிங்

பெற்ற ஸ்பின் பொல்டக் எனும் மலைப்பிரதேசம் பாகிஸ்தான் எல்லைக்கு அண்மையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டு அரசாங்கம் அமைக்க ஏரியல் ஷரோன் அழைப்பு

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் தனது தேர்தல் வெற்றியைத் தொடந்து கூட்டு அரசாங்கத்தை அமைக்க ஏனைய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பெரும்பான்மை ஆசனங்களைப் பெறத் தவறிவிட்டது.

தற்பொழுது ஷரோன் தனது அரசாங்கம் பதவிக்காலம் முழுவதும் நிலைத்திருக்க தக்கவகையில் ஏனைய



வெற்றி மகிழ்ச்சியில் ஷரோன் அருகே நெதன்யாகு

கட்சிகளையும் கூட்டுச் சேர்க்க முடிவெடுத்து அழைப்பு விடுத்துள்ளார். ஆனால்- பிரதான எதிர்கட்சியான தொழிற்கட்சி, ஷரோனினது அழைப்பை ஏற்க மறுத்துள்ளது. இதே வேளை- மூன்றாவது பெரும்பான்மைக் கட்சியான சினுயிக் கட்சியினரும் இவ்வழைப்பை ஏற்க மறுத்துள்ளனர்.

நடந்து முடிந்த தேர்தலில்- லிக்குயிட் கட்சி முன்பு பெற்ற ஆசனங்களைவிட இரட்டிப்பான ஆசனங்களைப் பெற்றுள்ளது. இதேவேளை- பிரதான எதிர்க் கட்சியான தொழிற்கட்சி பலத்த தேர்தல் தோல்வியினைச் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இருந்தபோதும்- ஷரோனின் லிக்குயிட் கட்சி போதியளவு

# நான்கு புலனாய்வாளர்கள் மீதான மரண தண்டனைத் தீர்ப்பு வாபஸ்



ஈரானிய அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருந்த நான்கு நபர்களின் கொலைக்கு காரணமாக இருந்த, ஈரானிய புலனாய்வுத்துறை உத்தியோகத்தர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனைத் தீர்ப்பை அந்நாட்டு உயர்நீதிமன்றம் மாற்றியமைத்துள்ளது.

கொலையுண்டவர்களின் குடும்பத்தினர் கொலையாளிகள் நால்வருக்கும் மன்னிப்பு வழங்கியதால் உயர்நீதிமன்றம் மேற்படி தண்டனையை மாற்றியமைத்துள்ளது. இந்நான்கு நபர்களில் இருவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மூன்றாவது நபருக்கு வழங்கப்பட்ட தண்டனை மாற்றம் பற்றித் தெரியவில்லை. மற்றைய நபருக்கு 10 வருடச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நான்கு புலனாய்வுத் துறையினரும் - அதிபர் கதாமிக்கும் கடும் போக்காளருக்கும் இடையில் நடைபெற்ற பிணக்குகளின்போது- கடும்போக்காளருக்கு எதிராக செயறபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மத்திய பிரதேச சட்டசபைத் தேர்தல் அமைச்சர்களை களம் இறக்கும் பி.ஜே.பி

இந்தியாவில் மத்தியப் பிரதேசம் மாநிலத்தில் சட்டசபைத் தேர்தலை நடத்த பிரதமர் வாஜ்பாயின் பி.ஜே.பி அரசாங்கம் ஆயத்தமாகி வருகிறது. இதன் பொருட்டு வாஜ்பாய் அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்கள் இருவர் தமது பதவிகளை இராஜினாமா செய்துவிட்டு தேர்தல் களத்தில் முழுமையாகக் குதித்துள்ளனர்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் துறை அமைச்சர் பிரமோத் மகாஜனும், சுரங்கம் மற்றும் நிலக்க ரித்துறை அமைச்சர் உமா பாரதியுமே தமது பதவிகளை இராஜினாமாச் செய்த அமைச்சர்கள் ஆவார்.

தனது இராஜினாமா பற்றி கருத்துக் கூறிய பிரமோத் மகாஜன், இது எனக்குப் பதவியிறக்கம் அல்ல. இனி வரும் பன்னிரெண்டு மாதங்களும் பி.ஜே.பி.க்கு நெருக்கடி மிகுந்த



இம்முறையும் தோற்றால் பி.ஜே.பிக்கு பேரழிவு

காலகட்டமாகும். எனவே, தேர்தலில் முழுமையாக வேலை செய்யவே பதவியை இராஜினாமாச் செய்தேன் எனக் கூறினார்.

கடந்த மாதங்களில் நடைபெற்ற மாநிலத் தேர்தல்களில் பி.ஜே.பி எதிர்பார்த்த வெற்றிகளைப் பெறாதமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஐவரிகோஸ்ட் யுத்தம் தீர்ந்தால் பிரெஞ்சுப்படைகள் வெளியேறும்

ஐவரிக்கோஸ்ட்டில் கடந்த நான்கு மாதங்களாக நடைபெற்று வரும் சிவில் யுத்தம் அமைதியான முறையில் தீர்க்கப்படுமாயின், அங்கிருந்து பிரெஞ்சுப் படைகள் விலகும் என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் விலிபின் தெரிவித்துள்ளார்.

ஐவரிக்கோஸ்ட் ஜனாதிபதி, அதிகாரங்களை போராளிகளுடன் பகிர்ந்து கொள்வதற்கான உடன்படிக்கையில் கடந்த சனிக்கிழமை கையொப்பமிட்டார்.

அதேவேளை- ஐவரிக்கோஸ்ட்டின் ஜனாதிபதிக்கு அந்நாட்டு இராணுவம் எழுதியுள்ள கடிதத்தில், போராளிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பாதுகாப்புத்துறையையும் உள்விவகாரங்களையும் பொறுப்பேற்பதனை அனுமதிக்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ளது.



அமைதிகாக்கவந்து யுத்தத்தில் பங்கேற்ற பிரெஞ்சுப் படையினர்

## இன்றைய நாள் இனிய நாள்

**30-01-2003 - வியாழக்கிழமை**

**மேடம்** :- அதிகாரம், புத்திரரால் நன்மை, பணமுடை, அதிக செலவு.

**இடபம்** :- சிநேகிதரால் கவலை, சந்தோசம், பொருள்வரவு.

**மிதுனம்** :- தேகசுகக் குறைவு, குடும்ப சுகம், பிரயாணத்தால் நன்மை, ஒழுக்கக்கேடு.

**கர்க்கடகம்** :- பொருள் வரவு, மனமகிழ்ச்சி, நற்கீர்த்தி, லட்சுமி கடாச்சம்.

**சிங்கம்** :- விபத்தினால் காயம், தேகசுகக்குறைவு, காரிய சித்தி, திரவியலாபம்.

**கன்னி** :- களஸ்திரசுகம், குடும்பச்சிறப்பு, சத்துருபீடை, சிநேக நன்மை.

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

**துலாம்** :- லட்சுமி கடாச்சம், தொழில் விருத்தி, சந்தோசம், தனதானிய விருத்தி.

**விருச்சிகம்** :- புத்திக்குறைவு, நிலைப்பிரிவு, நல்வாழ்வு, குடும்பசுகம்.

**தனு** :- மனச்சோர்வு, தனலாபம், நற்குணம், பொருள்வரவு.

**மகரம்** :- சிநேகித நன்மை, அதிக செலவு, புத்திரசோகம், பொருள் விருத்தி.

**கும்பம்** :- துயரம், ரோகபயம், பொருள்வரவு, தனலாபம்.

**மீனம்** :- தேகஆரோக்கியம், உறவினர்வருகை, அலைச்சல், பெரியோர் மதிப்பு.

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா



10.30, 2.30, 6.00, 9.30 (சி-398)
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

நிறஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
லோறன்ஸ், குணால், உஷா நடித்த
அற்புதம்
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 காட்சி
TOMB RAIDER (சி-397)

அபிவிருத்திப் பொருளியல் இதழ் - 3
வெளியீட்டு விழா
இளம் பொருளியலாளர் மன்றத்தின் வருடாந்த வெளியீடான அபிவிருத்திப் பொருளியல் இதழ்- 3 (விசேடமாக உலகமயமாக்கல் பற்றியது) வெளியீடு செய்யப்பட உள்ளது.
*காலம்* :- 30.01.2003 (வியாழன் பி.ப 3.00 மணி)
*இடம்* :- பொருளியற்துறை மண்டபம்.
*தலைமை*:- K.சிவகுமார்
(தலைவர் இளம் பொருளியலாளர் மன்றம்)
ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நன்றி
**இளம் பொருளியலாளர் மன்றம்,**
**பொருளியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்.** (220)

# காணாமற்போனோர் பற்றிய முடிவுகள்

# நுண்ணாய்வு முடிந்ததும் வெளியிடப்படும்!

## மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவிப்பு

யாழ்.குடாநாட்டில் காணாமற்போனோர் பற்றிய விசாரணைகளை மேற்கொண்டுவரும் - மனித உரிமை ஆணைக்குழு, தமது நுண்ணாய்வுகள் முடிந்ததும் - அது பற்றிய பெறுபேறுகளைக் காலக்கிரமத்தில் முறைப்பாட்டுக்காரர்களிடம் தெரிவிக்கவிருப்பதாக அறிவித்துள்ளது.

இது பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தேசிய இணைப்பாளர் எம்.சி.எம்.இக்பால் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

மனித உரிமை ஆணைக்குழுவின் காணாமற்போனோர் பற்றிய விசாரணைகள் மேற்கொள்வதற்கு என நியமிக்கப்பட்ட தேவநேசன் நேசையா, கே.எச்.கமிலஸ் பெர்ணான்டோ, திருமதி ஜெசிமா இஸ்மாயில் முதலியோரைக் கொண்ட விசாரணைக்குழு நடந்த 24 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் 25, 26 ஆம் திகதிகளில் சாவகச்சேரியிலும் விசாரணகளை மேற்கொண்டது.

அச்சமயம் 66 முறைப்பாட்டுக்காரர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களுள் 53 போரே விசாரணைக்காகச் சமுகமளித்திருந்தனர்.

1996 ஆம் ஆண்டில் நடைபெற்ற சுற்றிவளைப்புக்களின்போது தடுத்து வைக்கப்பட்டுக் காணாமற்போனோர் பற்றியும், வீதிப் பரிசோதனை நிலையங்களில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பற்றிய சம்பவங்களும் இவற்றுள் அடங்கும்.

வடக்கில் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் பற்றி பாதுகாவலர் சங்கத்தினால் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவுக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டிருந்த 232 பேர் கொண்ட பட்டியலிலுள்ளோர் தொடர்பாகவே விசாரணைகள் நடாத்தப்பட்டன. குறித்த பெயர்ப்பட்டியலிலும், வேறு அவ்வகையிலான முறைப்பாடுகளிலும் உள்ளவையே விசாரிக்கப்பட்டன என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும். குறித்த பட்டியல்களில் இல்லாதோரின் முழுப்பெயர் சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொள்ள இவ் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை.

ஆகவே, அக்காலத்தில் காணாமற்போனோர் பற்றிப் புதிதாகச் சமர்ப்பித்த முறைப்பாடுகளை இக்குழு விசாரணை செய்யவில்லை. அவை உரிய நடவடிக்கைக்காக மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பப்பட்டன.

குறித்த திகதிகளில் விசாரணைக்காக அழைக்கப்பட்டு விசாரணைக்கு சமுகமளிக்கமுடியாது போனவர்கள் மீண்டும் விசாரணக்காக அழைக்கப்படவுள்ளனர்.

விசாரணைகளின்போது கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய நுண்ணாய்வுகளின் பொழுது சம்பந்தப்பட்ட நபர்களுக்கு என்ன நடந்தது, அவர்கள் எங்கு இருக்கிறார்கள், அவர்கள் காணாமற்போனமைக்கு யார் பொறுப்பாக இருந்தனர். போன்றவை பற்றி இக்குழு அறிய தம்மாலான முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளது. அந்நுண்ணாய்வுகளின் பெறுபேறுகள் காலக்கிரமத்தில் முறைப்பாட்டுக்காரர்களுக்குத் தெரிவிக்கப்படவுள்ளது.

யாழ். சென்ற மனித உரிமை விசாரணைக்குழு ஏற்கனவே நடைபெற்ற நுண்ணாய்வுகளின் தொடர்ச்சியாக -

பங்குனி மாதம் 1 ஆம், 2 ஆம் திகதிகளில் மீண்டும் யாழ்ப்பாணத்தில் எஞ்சியுள்ள முறைப்பாடுகள் சம்பந்தமாகத் தொடர் நடவடிக்கை எடுப்பதற்குச் செல்லவுள்ளது என அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.வைத்தியசாலைக்கு முறிவு நெறிவு வைத்தியர் புதிதாக நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் முறிவு நெறிவு விசேட வைத்தியர் ஒருவர் நேற்று பதவியேற்றுள்ளார்.

வெளிநாட்டில் கல்வியை முடித்து வந்த வைத்திய கலாநிதி க.உமாபதியே யாழ்.வைத்திய சாலையில் முறிவு நெறிவு வைத்திய விசேட நிபுணராக' பொறுப்பேற்றுள்ளவராவர்.

## வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கம்பர் மலையங்கம்பன்ஸ் விளையாட்டு மைதானத்தில் ஞாயிறன்று காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளதாகப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்தார்.

(13)

# தொடர்ந்தும் பதவியில் இருக்கவே ஹொவ்டேயை நோர்வே கேட்டது

## எனக் கண்காணிப்புக்குழு அறிவிப்பு

ஜெனரல் புறூவ் ஹொவ்டேயை தொடர்ந்தும் பதவியில் நீடித்திருக்குமாறு நோர்வே அரசாங்கம் கோரியிருந்தபோதும், அவர் தனிப்பட்ட காரணங்களுக்காகவே பதவியிலிருந்து ஓய்வுபெற்றதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

புறூவ் ஹொவ்டே நோர்வே அரசினாலோ அல்லது வேறெந்த அழுதத்தம் காரணமாகவோ ஓய்வில் செல்லவில்லை. அவரது பணிக்காலம் முடிவடைந்தே செல்கிறார்.

ஆனால், இது குறித்து கொழும்புப் பத்திரிகைகள் சிலவற்றில் தவறான தகவல்கள் வெளிவந்திருக்கின்றன. அரசாங்கமும், புலிகளும், நோர்வே அரசும் புறூவ் ஹொவ்டே பதவியில் தொடர்ந்தும் இருப்பதையே விரும்பினர்.

ஆனாலும் அவரது சொந்தக் கருத்துக்கு மதிப்பளித்தே புதியவர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகப் போர்நிறுத்தக கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

# வன்னியிலிருந்து யாழ்.வந்தோருக்கு 25,000 ரூபா அடுத்த மாதத்தில்!

## அடையாள அட்டை உள்ளோருக்கு முன்னுரிமை

மீளக்குடியமர்ந்தவர்களுக்கான கொடுப்பனவுகள் அடுத்தமாத ஆரம்பத்தில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னிப்பிரதேசத்திலிருந்து கண்டி வீதியால் வந்து யாழ்.குடாநாட்டில் மீளக்குடியமர்ந்திருக்கும் அனைத்துக் குடும்பங்களுக்கும் தலா இருபத்தையாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இதற்கென மேற்கொள்ளப்பட்ட பதிவுகள் தற்போது நிறைவடைந்துவிட்டதாகவும், அடுத்தமாதம் ஆரம்பத்தில் இக்கொடுப்பனவுகளை வழங்கக் கூடியதாக இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

முதற்கட்டமாகத் தேசிய அடையாள அட்டை வைத்திருப்பவர்களுக்கே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு ஆட்பதிவுத் திணைக்களத்தின் விசேட கருமபீடம் ஒன்றை ஆரம்பித்து துரிதமாகத் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

தேசிய அடையாள அட்டையைப பெற்ற பின்னரே இவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் இப்பணியை நிகொட் நிறுவனம், மேற்கொள்ளும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளில் பல குழறுபடிகள் இடம்பெற்றதனாலேயே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(லி)

# கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை ரூ.50 லட்சம் செலவில் புனரமைப்பு

## சுகாதார அமைச்சு திட்டமிடுகிறது!

(தென்மராட்சி)

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையை 50 லட்ச ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்வதற்குச் சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதேவேளை ஆயுர்வேத மருத்துவ வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் பொரளை ஆயுர்வேத போதனாவைத்தியசாலையில் சகல வசதிகளும் அடங்கிய மருந்து உற்பத்திச்சாலையொன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்காக 3 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலையில் 5 கோடி ரூபாவுக்கு அதிகமான செலவில் 4 மாடிகளைக்கொண்ட வாட் தொகுதியொன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

## யாழ்.பல்கலையில் விடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் பிரெஞ்சு மொழித் திரைப்படமான " AFTER THE WAR ", தெலுங்குப் போராட்டம் குறித்த ஆவணப் படமான A STATE OF KILLING ஆகிய விடியோப் படக்காட்சிகள் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு புவியியல்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

ஆர்வலர்கள் அனைவரும் பங்குபற்றலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

(லி)

# செல்போன் பயன்படுத்துவது புற்றுநோய்க்கு வழி வகுக்கும்!

கையடக்கத் தொலைபேசிகளை (செல்போன்) கவனயீனமாக உபயோகிப்பதன் மூலம் மக்களின் உடல் நலம் பாதிப்படையும். வீடுகளில் இருந்து இத்தகையகையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துவதன் மூலம் மிக மோசமான தாக்கங்கள் ஏற்படலாம் என்று மகரகம புற்றுநோய் வைத்தியசாலை நிபுணர் டாக்டர் ஹரேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# சமஷ்டி முறைத் தீர்வு பிரிவினைக்கே வழிவிடும்

## பேராசிரியர் விஸ்வ வர்ணபால கூறுகிறார்

(கொழும்பு நிருபர்)

சமஷ்டி முறையின்கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமாயின் அது காலகதியில் பிரிவினைக்குத்தான் வழிவகுக்கும் என முன்னாள் அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுஜன மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சமஷ்டி பற்றிய விளக்கவுரையிலேயே பேராசிரியர் விஸ்வ வர்ணபால இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் சமஷ்டி அரசுகளின் தேசிய எல்லைகளை வரையறை செய்வதிலும் பல பிரச்சி னைகள் தோன்றும் வாய்ப்புக்கள் இருப்பதாகக் குறிப்பிட்டார். இக் கூட்டத்தில் ஜனாதிபதி மற்றும் பொ.ஐ.மு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

# 20 ஆயிரம் இளைஞர்களுக்கு வங்கிகளில் வேலைவாய்ப்பு!

## அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்தி வேலையற்றிருக்கும் 20 ஆயிரம் இளைஞர்களுக்கு அடுத்த ஆண்டு அரச வங்கிகளில் வேலை வாய்ப்புக்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு வங்கிப் பயிற்சி வழங்கப்பட்ட பின்னர், தொழில் வழங்கப்படும்.

இவர்கள் வங்கி உதவியாளர்களாக நியமிக்கப்பட்டு, மாதாந்தம் 4000 ரூபா சம்பளம் வழங்கப்படும் என்று அமைச்சர் பநதுல குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

# மூடப்பட்டுள்ள வீதிகளைத் திறக்குமாறு அச்செழுப் பகுதிப் பொதுமக்கள் கோரிக்கை!

(ஊரெழு)

அச்செழுப் பகுதியில் படையினரால் தொடர்ந்தும் தடுக்கப்பட்டுள்ள வீதிகளைத் திறந்துவிடுமாறு பொதுமக்கள் படை அதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அச்செழு இராணுவ முகாம் பகுதியில் இரண்டு வீதிகளையும், இரண்டு விவசாய வீதிகளையும் பொதுமக்கள் பாவிப்பதற்குத் தொடர்ந்தும் படைத்தரப்பினர் தடைவிதித்துள்ளனர். இதனால் பொதுமக்கள் தமது போக்குவரத்தின் போது பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

படையினரின் இத்தகைய நடவடிக்கையால் மக்கள் தமது வீடுகளில் மீளக் குடியேறவோ, விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.


இது தொடர்பாகப் பொதுமக்கள் சந்திப்பின்போது பேசிய படை அதிகாரி, தமது முகாம் பாதுகாப்பிற்காகவே வீதிகளை மூடி, மக்கள் பாவனைக்குத் தடை விதித்திருப்பததாகத் தெரிவித்திருந்தார்.

(96)

## வாழ்க வளமுடன்

### நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில் HAPPY BIRTHDAY



பெயர் :க.கீர்த்தனா
முகவரி: நோர்வே.

மூன்றாவது அகவையில்



பெயர் : இ.நேருஜன்
முகவரி:இல.448, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

ஏழாவது அகவையில்



பெயர் : ம.குஷானி
முகவரி: சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி:-----------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

------------------------------
பெற்றார் ஒப்பம்

## தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவு விளையாட்டுவிழா

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவு விளையாட்டு விழாவிற்கு இதுவரை விண்ணப்பங்கள் சமர்ப் பிக்காத, பதிவு செய்யப்பட்ட விளை யாட்டுக் கழகங்கள் தமது விண் ணப்பங்களை நாளை காலை 10.30 மணிக்கு முன்பாக பிரதேச செயல கத்தில் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலக விளையாட்டு உத்தியோ கத்தர் அறிவித்துள்ளார்.

அன்றைய தினமே சுற்றுப் போட் டிக்கான அட்டவணை தயாரிக்கப்பட வுள்ளதாகவும் இதற்கு விண்ணப்பங் கள் சமர்ப்பித்த அனைத்துக் கழகங் களையும் சமுகமளிக்குமாறும் கேட் கப்பட்டுள்ளது. (13)

## ஆசிரியரின்மையால் கல்விச் செயற்பாடு பாதிப்பு!

(உடுத்துறை)

மருதங்கேணி இந்து தமிழ் கல வன் வித்தியாலயம், ஆழியவளை சி.சி.த.க. பாடசாலைகளில் விஞ் ஞான ஆசிரியர் இன்மையால் மாண வர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

விஞ்ஞானபாட ஆசிரியர் நியமிக்கப்படாத நிலையில் க.பொ. த. சாதாரணதர வகுப்பு மாணவர் கள் உட்பட அனைத்து மாணவர்க ளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள் ளதாக பெற்றோர் கவலை தெரி விக்கின்றனர்.

(117)

## புற்றளை ம.வி. புதிய கட்டட திறப்பு விழா

(வடமராட்சி கிழக்கு)

புலோலி, புற்றளை மகா வித்தி யாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத்தின் திறப்பு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பழைய மாணவர் சங்கத் தலைவர் ரி.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

12 லட்சம் ரூபா செலவில் கட் டப்பட்ட இக்கட்டடத்திற்கான நிதியு தவிகளைப் பழைய மாணவர் சங்க மும், புனர்வாழ்வு அமைச்சும் வழங் கியுள்ளது. இக்கட்டடத்தை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி திறந்து வைப் பார். (17)

## அபிராமிப் பட்டர் விழா

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அபிராமிப்பட்டர் விழா நாளைமறுதினம் சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

## நீரிழிவு நோய் DIABETES

பகுதி 4

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

### மாறிவிட்ட உணவுப் பழக்கமும் நீரிழிவும்

எமது முன்னோர் உரலில் குற்றிய (**Hand Pound Rice**) தவிடு நிறைந்த அரிசியைப் பயன்படுத்தி உவித்தல் (கஞ்சியை வற்றவிடல்) முறையில் சோறு சமைத்தனர். சோற்றுடன், நார்ப்பொருள் மிகுந்தவை யும், இரசாயனப் பூச்சிநாசினிகள் விசிறப்படாதவையுமான கொவ்வை யிலை, முல்லையிலை, முசுட்டையிலை, கறிமுருங்கையிலை, முள்முருக் குத்தளிர், தவசி முருங்கையிலை, சீர்மைப் பொன்னாவரசு இலை, கறித்துவரையிலை, வட்டத்துத்தியிலை, செவ்வரத்தையிலை, மணத் தக்காளி இலை, பசன் இலை, பன்றித்தகரையிலை, பொற்றலைத் தகரையிலை, வாதநாராயணியிலை, ஒட்டியிலை, கொடிப்பசளியிலை, செடிப்பசளியிலை, பொன்னாங்காணியிலை, பலவன் இலை, கங்குல் இலை, அகத்தியிலை போன்ற இலைகளையும் வாழைப்பூ, வாழைத்தண்டு, தாமரைக்கிழங்கு, கொகிலாக்கிழங்கு போன்ற நார்ப்பொருள் மிகுந்த மரக்கறி வகைகள் பலவற்றையும் சேர்த்து உண்டனர். இவற்றுடன் குரக்கன், சாமி, வரகு, தினை, பயறு, உழுந்து, சோயா அவரை, தவிடரிசி போன்றவற்றின் மாவினா லான உணவுகளையும் உண்டு வந்தனர்.

இந்த உணவுகளின் மூலம், தேவையான அளவு காபோவைதரேற்று, உயிர்ச்சத்துக்கள், புரதம் போன்றவை கிடைத்தன. இந்த உணவில் மிகுந்திருந்த நார்ப்பொருட்கள் நீரில் ஊறி, உப்பிப் பருத்து வயிற்றை நிரப் பியதால், தேவைக்கு அதிகமாக உண்பது தவிர்க்கப்பட்டது. நார்ப்பொருட் கள் குடலின் பெரும்பகுதியுடன் தொடுகையுற்று இருந்ததால், குளுக்கோ சுத் துணிக்கைகள் குடற்சுவருடன் தொடுகையுறும் சந்தர்ப்பம் மட்டுப்படுத் தப்பட்டது. இதனால் அளவுக்கு அதிகமாக இருந்தபோதிலும் குளுக்கோசு உறிஞ்சப்படாமல மலத்துடன் வெளியேற்றப்பட்டது. இவர்கள் செய்த தொழில் களில் உடல் உழைப்பும் மிகுதியாக இருந்தது. இதனால், அன்று நீரி ழிவு மிகுந்திருக்கவில்லை.

இன்று, ஆலைகளில் குற்றப்பட்டதும், தவிடு பெருமளவில் நீக்கப் பட்டதுமான அரிசியில் சோறு சமைக்கிறோம். கஞ்சியையும் வடித்து அகற்றுகிறோம். தவிடு நீக்கிய கோதுமையை அரைத்துப் பெற்ற மாவில் தின்பண்டங்களைச் சீனி சேர்த்துத் தயாரிக்கிறோம். சீனி நிறைந்த மென் பானங்களைப் பருகுகிறோம். நாங்கள் அவாவுடன் மென்பானங்களைப் பருகுவதை அவதானித்த மென்பானத் தொழிற்சாலைகள் 1 1/2 லீற்றர் அளவு பெரிய போத்தல்களில் மென்பானங்களை நிரப்பி விற்கின்றன. பலர், 1 1/2 லீற்றர் போத்தலிலிருக்கும் சோடாவைக் கடைகளில் வாங்கி, ஒரு தடவையிலேயே அதனைக் குடித்துவிட்டு வெற்றுப் போத்தலையும் கடைகளின் முன் எறிந்துவிட்டுச் செல்வதை அவதானிக்கிறோம். நார்ப்பொருள் நிறைந்த உணவுகள் மிகவும் மெதுவாகவே சமிபாடு அடையும். சிறிது சிறிதாகவே சிறுகுடலினுட் செலுத்தப்படும். இவற்றிலுள்ள போசணைப் பொருட்கள் சிறிது சிறிதாகவே அகத்துறிஞ்சப்படும். ஆனால், குளுககோசுச் செறிவு மிகுந்த சோடா போன்ற மென்பானங்களில் இருக்கும் குளுக்கோசு விரைவாக அகத்துறிஞ்சப்படுவதனால் திடீரென, இரத்தத்தில் குளுக்கோ சின் செறிவு கூடும். மிகுந்துவிட்ட குளுக்கோசைக் கிளைக்கோஜினாக மாற்றுவதற்கு சதையி அதிகளவு இன்சுலினைச் சுரக்க நிர்ப்பந்திக்கப்படும். குருதியில் மிகுந்துவிட்ட குளுக்கோசைச் சமாளிக்க முடியாமலும், ஈடுகொ டுக்க முடியாமலும் சதையி திணறலாம். இந்நிலையில் நீரிழிவு ஏற்படலாம். சதையி முற்றாகச் செயலிழந்ததால் இன்சுலின் ஏற்றியே குணப்படுத்த வேண்டிய நீரிழிவு தோன்றலாம்.

மிக அதிகமான குளுக்கோசு கொழுப்பாக உடலில் சேமிக்கப்படுவ தனால் உடல் பருமனும் எடையும் கூடும். அதிகரித்த உடல் எடை, இறக்கி வைக்க முடியாத சுமையாகும். இச்சுமை, நாரிநோவு, நாரி உழைவுகளை ஏற்படுத்தும். இந்த உபாதைகளைத் தாங்கமுடியாத பலர், கொழுப்பு உறிஞ்சல் (**Lipo suction**) மூலம் ஒரு தடவையில் 1 - 1 1/2 லீற்றர் கொழுப்பைக் குற்றி அகற்றுவிக்கின்றனர். அதிகரித்த கொழுப்பு, குருதி அழுத்தத்தை மிகைப்படுத்தும். இருதய நோயை ஏற்படுத்தும். பாரிசவாதத் தினால் படுக்கையிலேயே வாழ்நாளைக் கழிக்க வைத்து விடும். இந்த அவலங்கள் ஏற்படாதிருக்க, சீனி மிகுந்த பானங்களை மிகையாக அருந்தாமலும், அதிகளவில் குளிர்களி உண்ணாமலும், அளவுக்கு அதிகமாக மாப் பொருளை உண்ணாமலும் வாழவேண்டும். *தொடரும்..*

# வரலாற்றுச் சிறப்புமிக்க கந்தரோடையை சிங்கள பௌத்த சின்னமாக்கும் முயற்சி!

(சென்ற வாரத் தொடர்ச்சி)

நாணய வகைகளுக்குள்ளே ஒரு முக்கியமான நாணயம், நாக வம்சத் தினால் வெளியிடப்பட்ட செம்பினா லான சதுரமான நாணயமொன்று எனக்குக் கிடைத்திருப்பது குறிப்பி டத்தக்கது. அந்த நாணயத்தினுடைய முற்பக்கத்திலே மயில் ஆடிக்கொண் டிருக்கிற காட்சி ஒன்று வரையப்பட் டுள்ளது. அதனுடைய பிற்பக்கத்திலே முருகப்பெருமானுடைய தோற்றம் சூலத்துடன் சித்திரிக்கப்பட்டிருப்பத னைக் காண்கின்றேன். அந்த வகை யில் அந்த நாணயத்தினுடைய காலம் நாகவம்சத்தினுடைய தோற் றக் காலமாக இருக்கவேண்டும் என் பது எனது திடமான நம்பிக்கையா கும். அந்த நாணயத்தின் அடியிலே காணப்படுகின்ற எழுத்து இன்னும் தெளிவாக வாசிக்கப்படுகின்ற தேவை இருந்து கொண்டிருக்கிறது. அது தொடர்ந்து செய்யப்படும் ஆய்வுகளின் மூலமாகவே, நாக வம்ச அரசியலின் ஆதிக்கத்தைக் கந்தரோடையில் நிறுவமுடியும்.

எனக்குக் கிடைத்த இரண்டா வது வகையான தொல்லியல் ஆய் வுகளிலே மட்பாண்டச் சான்றுகள், மட்பாண்டச் சாசனங்கள் குறிப்பிடத் தக்கவையாக இருக்கின்றன. மட் பாண்டச் சாசனங்களிலே பல தரப் பட்டவை எனக்குக் கிடைத்திருக் கின்றன. திராவிட வரி வடிவங்களைக் கொண்ட தனித்துவமான, தனித்தனி யான மட்பாண்டச் சிதறுகள், சாச னங்கள் எனக்கு நிறையக் கிடைத் துள்ளன. அவற்றிலே குறிப்பிடத் தக்கவையாக ழகரம், யகரம், ரகரம், ககரம், மகரம் போன்ற எழுத்துக்கள் நிறையக் கிடைத்திருக்கின்றன. இந்த "ழகர" எழுத்துக்கள் பல கட்ட வளர்ச் சியை உறுதிப்படுத்துவதாகக் கந்த ரோடையில் இருந்து பெற்றுச் கொளளப் பட்டவை சான்றாக விளங்குகின்றன.

1980 ஆம் ஆண்டு ஆனைக்கோட் டையில் கிடைத்த முத்திரை மோதி ரத்தில் காணப்படுகின்ற அந்தத் தமிழ் பிராமி வரி வடிவமுறையைக் கந்தரோடையில் கிடைத்த மட்பாண்ட சாசன வரி வடிவங்களிலே ஒப்பிட்

**பகுதி 4**

டுக் காணமுடிகிறது. அந்த "ழகரம்" பல கட்டங்களாக வளர்ச்சி பெற்றி ருந்த நிலையைக் கந்தரோடை மட்பாண்ட தமிழ்ப் பிராமி சாசனங் களில் இருந்து அறிந்துகொள்ள முடிகிறது. அதனை நன்கு நிறுவ வும் முடிகிறது. நாற்சூலம், முற்சூலம் பொறிக்கப்பட்ட மட்பாண்ட வரைபுக ளில் அந்த "ழகரம்" இணைக்கப்பட் டிருந்த தனித்துவத்தைக் காணும் போது, அங்கு ஒரு தனித்துவமான திராவிட மொழி பேசுகின்ற மக்களி னம் அத்தகைய மட்பாண்டத்தை புழக்கத்தில் வைத்திருந்ததனை நாங்கள் உறுதிப்படுதக்கூடியதாக இருக்கின்றது. இதனை விட மட்பாண்ட சாசனங்கள் என்று பார்க்கும்போது, தென்னிந்தியாவுக்குரிய தமிழ் பிராமி வரிவடிவ ஒலியன்களைக் கொண்ட சாசனங்கள் எமக்குக் கிடைத்திருப் பது முதன்முதலாக உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. 1971 ஆம்

**செ.கிருஷ்ணராஜா**
**நேர்காணல்: சாந்தகுமார்**

ஆண்டு கந்தரோடையிலிருந்து அமெ ரிக்க பென்சிலேனியா பல்கலைக்க ழகத்தால் மீட்கப்பட்ட ஒரு மட்பாண்ட சாசனத்திலே "ததஹபத" என்ற வாசகம் வட இந்திய பிராமி வரி வடிவமுறையில் எழுதப்பட்டிருப்பதாக வாசிக்கப்பட்டு பிரசுரிக்கப்படடிருப்ப தனை காண்கின்றோம். பேராசிரியர் இந்திரபாலா அவர்களினால் வெளி யிடப்பட்ட "பூர்வகலா இதழ்" 1 இல் அந்த சாசனத்தினுடைய பதிப்பு இடம்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக் கது. ஆனால் எம்மால் கந்தரோடை மீது மேற்கொள்ளப்பட்ட மேலாய்வு களின் பொழுதும், அகழாய்வுகளின் பொழுதும் கிடைத்த பிராமி சாசனங் களைப் பார்க்கும் பொழுது அவை தென்னிந்திய தமிழ் பிராமி வகை யைச் சேர்ந்தவையாக இருப்பதை யும், அதிலும் கி.மு 6 ஆம் நூற்றாண் டுக்குரிய வரி வடிவ அமைதியைக் கொண்டிருக்கிற முறையையும் உறு திப்படுத்தக்கூடியதாக இருக்கின்றது.

(அடுத்த வாரம் தொடரும்)



திரிசூலம் அல்லது ழகர அடையாளம்- உச்சிப்பனை, கந்தரோடையில் பெற்றது.



சுடுமண் நாணயக் குற்றிகள்- கந்தரோடை அகழ்வி லிருந்து பெறப்பட்டது.

# பயிர் வகை கொண்டு பயிர்களைப் பாதுகாப்போம்!

எமது பயிர்ச்செய்கையானது வெற்றிகரமானதாகவும், இலாபகரமானதாகவும் இருப்பதற்குச் சிறந்த பீடை முகாமைத்துவமும் சீரான பசளையிடலும் அவசியமாகும். இன்று பீடை முகாமைத்துவமானது மாபெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அதாவது சூழற்பாதுகாப்புடன் கூடிய பீடை முகாமைத்துவம் (Eco - Friendly pest Management) தற்பொழுது தேவையாயுள்ளது. இதனை நாம் நடைமுறைப்படுத்த வேண்டுமெனில் இயற்கை முறையான பீடை முகாமைத்துவம் பற்றித் தெரிந்திருக்க வேண்டும்.

இவ்வாறு சூழலை மாசுபடுத்தாத வகையில் பயிர்களைப் பாதுகாக்கும் ஒரு முறையே பயிர்வகை கொண்டு, பயிர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகும். பயிர்ப்பாதுகாப்பில் தாவரப்பொருட்களை



கிருமிகளை அழிக்கும் வேம்பு.

பயன்படுத்தும் ஆய்வுகள் இந்தியாவிலுள்ள ஏனைய பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், விவசாயிகளின் பயன்பாடு மிகச் சொற்பமாகவே இருந்தது. ஆனால் தற்போது பீடைநாசினிகளின் விலை அதிகரிப்பு, பீடைகளின் புதுப்பிரிவு (Biotype) வீரியம் (Visistanced) என்கின்ற பிரச்சினைகளால் பயிர்களைப் பாதுகாக்க மாற்று வழியினை நாடுகின்றார்கள்.

வேம்பு இன்று பயிர்ப்பாதுகாப்பில் ஓரளவாவது நமது யாழ். மாவட்ட விவசாயிகளினால் உபயோகிக்கப்படுகிறது. இதனை விட மேலதிகமாக வேறு பல தாவரங்களும் பீடைக் கட்டுப்பாட்டுமுறையில் எமது அண்டைநாடுகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அவ்வாறான சில தாவரங்களின் இயல்பையும், கட்டுப்பாட்டு முறையையும் இங்கு பார்ப்போம்.

1. **Tinosporarumphil**
   *தமிழ்ப்பெயர்:* சீந்தில் வகைப்பயிர்
   *பாகம்* : தண்டு
   *கட்டுப்படுத்தப்படும் பூச்சிகள்:*
   நெல் சந்துகுத்தி, கபிலநிறத் தண்டுத்தத்தி, கோவா இலையரிபுழு, பச்சிலைத்தத்தி, நெல் கரும்மூட்டுப் பூச்சி.
   *செயற்திறன் :* Antifeedent - உணவு உட்கொள்ளவிடாது தடைசெய்யும்.
   *பயன்படுத்தப்படும் முறை :* 10Kg தண்டுகளை ஓரடி நீளமாக வெட்டி நெல்வயலில் பரவலாக வீசி நெல் விதைப்பிடம் உழுதுவிடவும். 250 g/l (நீரில்) தண்டுச்சாற்றில் நெல்நாற்றுக்களை 8 - 10 மணித்தியாலம் ஊறவைத்து நடவும். (7Kg / Ac).
2. **Gliricidia sepium**
   சீமைக் கிளுவை
   *பாகம் :* வேர், பட்டை, இலை, கனி, விதை.
   *பூச்சி வகைகள் :* அழுக்கணவன், சேனைப்புழு, கூடுதாங்கிப்புழு, நெல் சுருள் இவற்றுடன் தெள்ளு, எலி என்பனவும் கட்டுப்படும்.
   *செயற்திறன் :* Antifeedent - உணவு உட்கொள்வதைத் தடுக்கும்.
   *பயன்படுத்தும் முறை:*
   4 சாக்கு இலை/Ac நிலத்துடன் விசிறவும். இலைச்சாறு:நீர்= 1:5 விகிதத்தில் கலந்து கிழமைக்கு ஒருமுறை பயிர்களுக்குத் தெளிக்கலாம். இது பசளையாகவும் செயற்படக் கூடியது.
3. **Curcuma domestica**
   கறிமஞ்சள்
   *பாகம் :* கிழங்கு
   *பீடைவகை :*
   பல்லினப்பூச்சிகள், பக்றீரியா
   *செயற்திறன் :* Repellent. பூச்சிப்பீடைகளை அணுகவிடாது தடுக்கும். பொதுவாக கோவா, பீற்றூட், வெங்காயம் என்பவற்றைத் தாக்கும் அரி புழு, சேனைப்புழு என்பவற்றைக் கட்டுப்படுத்தும்.
   *பயன்படுத்தப்படும் முறை:* 500 g மஞ்சளை (அரைத்து) 2 L நீரில் ஊறவைத்து வடித்து 20 L நீருடன் கலந்து ஒரு ஏக்கர் மரக்கறிகளுக்கு விசிறலாம்.
4. **Anamirla cocculvs**
   காக்கைக் கொல்லி
   *பாகம் :* கனி, விதை
   *பீடைவகை :* நெல் கரும்மூட்டுப்பூச்சி, நெல்மூட்டுப்பூச்சி
   *செயற்திறன் :* Metabolic disorder அனுசேப வீதத்தைக் குழப்புதல்.
   *பயன்பாட்டு முறை :* விதைகளின் பொடிக்கு (1 மேசைக்கரண்டி) 1கலன் நீர் சேர்த்து விசிறலாம்.
5. **Alpinia galanga**
   பேரரத்தை
   *பாகம் :* கிழங்கு
   *பீடைவகை :* வெங்காய தாள்கோதிப் புழு, சேனைப்புழு, கோவா டயமன் முதுகு அந்திப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.
   *செயற்திறன் :* பூச்சி கொல்லியாகவும், துரத்தியாகவும் தொழிற்படுகின்றது.
   *பயன்படுத்தப்படும் முறை :* 1 1/2 Kg வேப்பிலை, 1 Kg பேரரத்தை, 1 Kg சிற்றனெல்லா எடுத்து சாற்றைப் பெறவும். பின் 1 L சாற்றிற்கு 30 L நீர் கலந்து விசிறவும்.
   இது 1 ஏக்கர் நெற்பயிருக்கோ அல்லது வேறு பயிருக்கோ விசிறப் போதுமானது. நெற்பயிர் முளைத்து 15 ஆம், 30 ஆம், 45 ஆம், 60 ஆம் நாட்களில் கலவையாக விசிறவேண்டும்.
6. **Azadiracta Indica**
   வேம்பு
   *பாகம்:* தாவரப்பகுதி முழுவதும்
   *பீடைகள் :* சாறுறிஞ்சிகள், சிற்றுண்ணிகள், விலாங்குப்புழு அநேக பூச்சிப் பீடைகள்.
   *செயற்திறன் :* உணவு உட்கொள்வதைத் தடுத்தல், முட்டையிடுவதைத் தடுத்தல், வளர்ச்சி குன்றவைத்தல், குடல் நஞ்சாதல்,
   *பயன்படுத்தப்படும் முறை :* அநேக முறைகள் உள்ளன. அவற்றில் சில 725 Kg வேப்பம் பிண்ணாக்கு 11 Ac மண்ணுடன் உழுதால் மணிவேர் உருவாகும். விலாங்குப்புழு கட்டுப்படுத்தப்படும்.
   50 g விதை 1L நீர் 15 ஆம், 30 ஆம், 45 ஆம் நாட்களில் நெல் முளைத்த பின் விசிறினால் அநேக பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.
7. **தேங்காயில் மயிட்ஸ்**
   வேப்பெண்ணை 20 mL, உள்ளிச்சாறு 20 g, சவர்க்காரம் 5 g, நீர் 1 L கலந்து மாதம் ஒரு முறை தெளிக்கவும். இவை தவிர வெவ்வேறு பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும் சில தாவர வர்க்கங்களே எமது பிரதேசத்தில் இருக்கின்றன.

எனவே - எமது பிரதேசப் பயிர்வகை தொண்டே எமது உணவுப்பயிர் மற்றும் ஏனைய பயிர்களினை தாக்கும் பீடைகளைக் கட்டுப்படுத்தி எமது சூழலைப் பாதுகாப்போம்.

பு. தர்சினி,
தகவல் தொடர்பு மையம்.

# யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக

## ஓர் அறிமுகம்



(தொடர்ச்சி)

புதிய வழங்கல் நல்ல வாய்ப்புள்ள முதலீடு என நீங்கள் தீர்மானித்தால், நீங்கள் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பப்படிவத்தினை நிரப்பி அதனை பங்குத்தரகர் கம்பனிகளினூடாக இம்முறையின் கீழ் பங்குகளைக் கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும் விரும்பும் முதலீட்டாளர்கள் தமது வியாபார நடவடிக் கைகளைப்

# பங்குச் சந்தை வர்த்தகம்

விண்ணப்பப்படிவத்தினை நிரப்பி அதனை வருமதித் தொகைக் கொடுப்பனவுடன் சம்மந்தப்பட்ட கம்பனிக்கு நேரடியாக அனுப்பி வைக்கமுடியும். எனினும், நீங்கள் செய்யப்போகும் முதலீடு, நீங்கள் விரும்பும் ஆதாயத்தினைத் தரமுடியுமா என்பதனை நீங்கள் கம்பனியின் தகவல் தொகுப்பினைக் கவனமாக வாசித்து அறிந்து கொள்ளுதல் வேண்டும். தேவை ஏற்படின் மதிப்புரை நிபுணர் ஒருவரை உசாவுவது நன்று. உங்கள் பங்குகளை மத்திய சேமிப்பு முறைமையில் (CDS-Central Depository System) இல் இடுமாறு கோருவதும் புத்திசாலித்தனமானது. நீங்கள் உங்களது CDS கணக்கு இலக்கத்தினை விண்ணப்பப்படிவத்தினை நிரப்புவதன்மூலம் பெறமுடியும். அநேகமாக உங்களது அடையாள அட்டை இலக்கமோ, வெளிநாட்டவராயின் கடவுச்சீட்டு இலக்கமோ CDS கணக்கின் இலக்கமாகப் பேணப்படலாம்.

இத்தகவல் தொகுப்பின் மூலம் கம்பனியின் நோக்கம், கம்பனியின் பிரதான துணைச் செயற்பாடுகள், கம்பனியின் இயக்குநர் சபை சம்பந்தமான விபரங்கள் வெளியிடப்படும்.

இதற்கு உதாரணமாக, மிக அண்மையில் Sri Lanka Telecom Ltd. இனால் வெளியிடப்பட்ட தகவல் தொகுப்பை உதாரணமாகக் கூறலாம்.

இத்தகைய தகவல் தொகுப்பின் மூலம் ஓர் கம்பனியின் பங்குகளில் முதலீடு செய்வதா? விடுவதா? என்பதனை முதலீட்டாளர்கள் தீர்மானிக்க முடியும். உதாரணமாக- ஓர் கம்பனி சுற்றுலாத்துறை சம்பந்தமான தொழிலில் ஈடுபட்டுள்ளது என வைத்துக் கொள்வோம். அத்தொழிற்துறையில் ஏற்கனவே உள்ள கம்பனிகளின் இலாபம், அவற்றின் செயற்பாடுகள், அவை வருடா வருடம் தமது பங்குதாரர்களுக்கு அளிக்கும் பங்குலாபம், அப்பங்குகளின் மூலம் கடந்த காலங்களில் பெறப்பட்ட மூலதன இலாபங்கள் என்பனவற்றினை ஆய்வு செய்வதன் மூலம்- நாம் புதிதாக ஆரம்பிக்க உள்ள அத்தொழில்துறைசார்ந்த கம்பனியின் இலாப மதிப்பீட்டை நாம் பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறான பல வழிகள் மூலம் குறிப்பிட்ட புதிய கம்பனிகளின் எதிர்கால செயற்படும் ஆற்றலை நாம் மதிப்பீடு செய்ய முடியும்.

இடைநிலைச் சந்தை (Secondary Market) முதலீட்டாளர்கள் தமக்கிடையே பங்குகளைக் கைமாற்றிக் கொள்வதனைக் குறிக்கும்.

உழைப்போம் உயர்வோம்!
தொழில் மலர்

மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது பிரதேச ரீதியான கொடுக்கல் வாங்கல் நிகழ்வதற்குத் துணையாவதுடன், தரகர்கள் தத்தமது செயற்பாட்டைக் கொழும்புக்கு வெளியில் உள்ள தரகர்களின் முதலீட்டாளர்களுக்குக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்தப்படுகின்றது.

இதனால் பங்குச்சந்தை தேசிய ரீதியாக விரிவாக்கம் செய்வதற்கு வழிவகுக்கின்றது. உதாரணமாக, அண்மையில் மாத்தறை மாநகரில் பங்குச்சந்தை நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையை இங்கு குறிப்பிடலாம்.

இம்முறையில் பங்குக் கைமாற்றல் செயற்பாடுகள் முன்னைவிட வினைத்திறன் வாய்ந்ததாகவும், அதிகளவிலான கொடுக்கல் வாங்கல்கள் நிகழக்கூடியதாகவும் இன்று பங்குக் கைமாற்றங்கள் விரிவுபெற்றுக் காணப்படுகின்றன. இவ்வகையில் யாழ்ப்பாணத்திலும் பங்குச்சந்தை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

- வசந்தகுமார்.

இன்றைய பங்குச் சந்தை நடைமுறை மரபுகளுக்கமைய பொதுக்கம்பனிகள் தம்மைப் புதிதாகப் பட்டியற்படுத்திக் கொள்வதற்குத் தங்கள் விண்ணப்பங்களைத் தரகர் நிறுவனங்கள் மூலம் கொழும்புப் பங்குச் சந்தைக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

இப்போது பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பங்குகளுக்கான கைமாற்றல்கள் இரண்டாந்தரச் சந்தை மூலம் நிகழ்கின்றன.

(அடுத்த வாரம் தொடரும்)

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சாவகச்சேரி | திருநெல்வேலி | சுன்னாகம் | ஊர்காவற்றுறை | மருதனார்மடம் | யாழ்ப்பாணம் | நெல்லியடி | சங்கானை |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றை | 40/- | 80/- | 40/- | 40/- | 50/- | 60/- | 40/- | 40/- |
| உருளைக்கிழங்கு | 60/- | 50/- | 60/- | 50/- | 60/- | 65/- | 45/- | 50/- |
| கத்தரிக்காய் | 40/- | 40/- | 40/- | 40/- | 30/- | 50/- | 60/- | 30/- |
| பாகற்காய் | 60/- | 60/- | 50/- | * | 60/- | 60/- | 70/- | 40/- |
| வெண்டிக்காய் | 40/- | 20/- | 30/- | 40/- | 25/- | * | 40/- | 25/- |
| கரட் | 40/- | 30/- | 40/- | 30/- | 60/- | 50/- | 45/- | 35/- |
| பீற்றூட் | * | 40/- | * | 40/- | 40/- | 45/- | * | 30/- |
| வெங்காயம் | 40/- | 30/- | 25/- | 25/- | 25/- | 30/- | 45/- | 50/- |
| பச்சைமிளகாய் | 50/- | 60/- | 50/- | 60/- | 40/- | 60/- | 50/- | 35/- |

# யாழ். குடாநாட்டில் அன்றும் இன்றும் கடற்தொழில் நடவடிக்கைகள்

இன்றைய அத்தியாயத்தில் காங்கேசன்துறை மேற்குப் பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளின் கடற்தொழில் நடவடிக்கைகள் பற்றிப் பார்ப்போம்

காங்கேசன்துறை மேற்கு கடற்தொழில் பரிசோதகர் பிரிவினுள் அடங்கும் பகுதிகளாவன வடகடற்பரப்பில் கிழக்கிலிருந்து மேற்குப் பகுதிவரை,

1. ஊறணி
2. காங்கேசன்துறை
3. வலித்தூண்டல்
4. சேந்தாங்குளம்
5. சீந்தில் பந்தல்
6. பொயிட்டி
7. மாரீசன்கூடல்

பொதுவாக இப்பிரதேசங்களின் கடற்தொழில் நடவடிக்கைகள் 1990 இற்கு முற்பட்ட காலங்களில் செழிப்பானதாகவே இருந்தது. குறிப்பாக இப்பிரதேசங்களில் கேந்திர முக்கியத்துவம் உடைய இடங்கள் அமைந்துள்ளன. அத்துடன் காங்கேசன்துறை துறைமுகம், ஹாபர்வியூ உல்லாச விடுதி போன்றன இப்பிரதேசத்தில் இருப்பதால், இப்பிரதேசத்தில், சந்தைப்படுத்தும் வசதிகள் சிறப்பாக இருந்தன.



இப்பிரதேசக் கடற்தொழிலாளர்களின் கல்வியறிவும் சராசரியாக இருந்ததனால், இவர்கள் கப்பல் சிப்பந்திகள், கப்பல் முகவர்களாக வேலைவாய்ப்புக்களையும் பெற்றிருந்தனர்.

இதனால் இவர்களின் வாழ்க்கைத்தரமும், செல்வச் செழிப்பும் ஓரளவு உயர்ந்த இடத்திலேயே இருந்தது.

ஆனால், 1990 களில் ஆரம்பமான 2 ஆம் கட்ட ஈழப்போருடன் இவர்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்ததோடு, இவர்களது தொழில்களில் பாரிய பின்னடைவும் ஏற்படத் தொடங்கியது.

தற்போது - ஊறணி, காங்கேசன்துறை, வலித்தூண்டல், சேந்தாங்குளம் போன்ற பிரதேசங்களை உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தியிருப்பதனால் இப்பகுதிகளிலுள்ள மீனவ மக்கள் இளவாலை, பருத்தித்துறை, சக்கோட்டை, வியாபாரிமூலை போன்ற இடங்களில் வாழ்கின்றனர்.

பொதுவாக இப்பிரதேச மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்கின்றவர்கள். ஆரம்ப காலத்தில் இப்பகுதிகளில் F.G.B. எனப்படும் இயந்திரத் தும்புக் கண்ணாடிப் படகுகள், 3 1/2 தொன் வள்ளங்கள் தொழிலில் ஈடுபட்டன. இப்பிரதேச மக்களின் மீன்பிடித் துறைமுகங்களாவன,

1. ஊறணி
2. காங்கேசன்துறை
3. வலித்தூண்டல்
4. சேந்தாங்குளம்
5. இளவாலைத்துறை
6. கப்பலடித்துறை
7. குசுமன்துறை

மீன்பிடித்துறை என்பது மீனவர்கள் தமது கடற்கலங்ளை நிறுத்தி வைத்து தொழிலுக்குப் புறப்படும் இடங்கள் ஆகும். தற்போது குசுமன்துறையைப் பயன்படுத்துவதற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காக 7 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றது. UNHCR, UNDP, CARE, கியூடெக் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் சுழற்சி முறையில் கடன்கள் மற்றும் மீன் பிடிப்பதற்காகக் கட்டுமரங்களை வழங்குதல் போன்ற உதவிகளைச் செய்து வருகின்றன.

தற்போது இப்பிரதேசத்தில் தொழிலில் ஈடுபடும் கடற்கலங்களின் விபரங்கள்,

| 1990 களுக்கு முன் இப்பிரதேசத்தின் கடற்றொழிலாளர் விபரங்கள். | | | |
|---|---|---|---|
| பிரதேசம் | குடும்ப எண்ணிக்கை | கடற்றொழிலாளர் எண்ணிக்கை | குடித்தொகை |
| 1.ஊறணி | 26 | 15 | 107 |
| 2.காங்கேசன்துறை | 59 | 50 | 205 |
| 3.வலித்தூண்டல் | 23 | 23 | 86 |
| 4.சேந்தாங்குளம் | 50 | 56 | 205 |
| 5.சீந்தில்பந்தல் | 26 | 31 | 106 |
| 6.பொயிட்டி | 30 | 18 | 104 |
| 7.மாரீசன்கூடல் | 48 | 34 | 168 |

இயந்திர மயமாக்கப்பட்ட தும்புக் கண்ணாடி வள்ளம் (F.G.B.) - 40, கட்டுமரங்கள் - 75.

இப்பிரதேசத்தில் பாரை, விளை, அறக்குளா, துள்ளுவண்டன், கும்புளா, சுறா, திருக்கை, கட்டாப்பாரை, சூடை போன்ற மீன்கள் பெருமளவு பிடிக்கப்படுகின்றன.

தற்போது இப்பிரதேசக் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளையும் நோக்கும்போது,

**✷ மீள்குடியேற்றம்**

குறிப்பாக 1990 களில் தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து வடமராட்சிக் கரையோரப் பிரதேசங்களிலேயே பெருமளவு கடற்தொழிலாளர்கள் வாழ்கின்றனர். இவர்கள் இடப்பெயர்வால் இன்று சந்தித்துள்ள மிக முக்கியமான பிரச்சினைகளாவன,

தொழில் பிரச்சினை - அதாவது, இவர்கள் எல்லோரும் வடமராட்சிக் கடலில் தொழில் செய்வதனால் அப்பிரதேச மீனவர்களுடன் முரண்பாடுகள் தோன்றுகின்றன.

தற்போது இடம்பெயர்ந்து வன்னிப் பகுதிக்குச் சென்ற வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புகின்றனர். இதனால் அவர்களது வீடுகளில் தங்கியிருக்கும் இம்மீனவர்களது எதிர்காலம் பெரும் கேள்விக் குறியாகியுள்ளது. எனவே அவசரமான மீள்குடியேற்றம் ஒன்றின் மூலமே இப்பிரச்சினையைத் தீர்க்கலாம்.

**✷ மீன்பிடி உபகரணங்கள் இன்மை**

1990 களில் இடம்பெயரும்போது இவர்களது பெறுமதிமிக்க தொழில் உபகரணங்கள் எல்லாம் இழக்கப்பட்டுவிட்டன. எனவே, இவர்கள் பெரியளவில் முதலிட்டு தொழில் செய்யமுடியாமல் உள்ளது. இதனால் இவர்கள் பெரியளவில் வருமானமீட்ட முடியாதுள்ளது. அத்துடன், இந்திய றோலர்கள் இவர்களது வலைகளை அறுப்பதனால் இவர்களின் சிறு தொழில்கள்கூட முற்றாக இழக்கப்படுகின்றன. எனவே- இந்திய றோலர்களின் அத்துமீறல் களை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**✷ தொழிலை விட்டு விலகல்**

தொழில் இழப்பால் இப்பிரதேச வலுமிக்க தொழிலாளர்கள் கடற்றொழிலை விட்டு வேறு தொழில் செய்கின்றனர். இவர்கள் மீண்டும் கடற்றொழில் செய்வதற்குக் கடன்கள்/மானியம் வழங்குவதன் மூலம், மீண்டும் அவர்களை மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்தலாம்.

மாரீசன்கூடல் பகுதி இறால் வளர்ப்பதற்கு ஏற்ற பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ளது. எனவே, இப்பிரதேசத்தில் இறால் வளர்ப்பை ஊக்குவிப்பதன்மூலம் பல தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம் என ஆய்வறிக்கைகள் கூறுகின்றன.

**✷ வீதிகள்**

பொன்னாலை - கீரிமலை வீதி தற்போது போக்குவரத்திற்கு அனுமதியில்லை. இவ்வீதியைத் திறப்பதன் மூலம் மீனவர்களின் சந்தைப்படுத்தும் வாய்ப்பை அதிகரிக்கலாம் என உறுதியாகக் கூறலாம்.

(தொடரும்)

தமிழின்பன்

# குடாநாட்டு கைத்தொழில்களின் இன்றைய நிலை என்ன?

(சென்ற வாரத் தொடர்ச்சி)

புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் அமைப்புகளும், அரச அதிகாரிகளும் தமது செயற்பாடுகளை மக்களுக்குப் பயனளிப்பதாக மாற்றிக் கொள்ளு



தல் வேண்டும். அத்துடன் திட்டங்களைச் செயற்படுத்துவதில் உள்ள காலதாமதங்கள் களையப்படுதல் வேண்டும். மேலும், மேலிருந்து கீழான அணுகுமுறை நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக கீழிருந்து மேலான அணுகுமுறை கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும். அதாவது இங்கு "மக்களின் பங்களிப்பு" என்பது அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது.

இதன் மூலம் உண்மையான இழப்பீடுகளை அறிந்து கொள்ளவும், தேவைகளைக் கண்டுகொள்ளவும் வழிபிறக்கும். அத்துடன், பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகளும், கடனுதவிகளும் விரைவாக வழங்கப்படுதல் வேண்டும். முக்கியமாக, பாதுகாப்பு வலயங்கள் எனக் கூறப்படும் இடங்களிலுள்ள தொழிற்சாலைகளை இயக்குவிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

சர்வதேச, உள்ளூர்த் தொண்டு நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அவை சுதந்திரமாகவும், கட்டுப்பாடுகள், புறக்கணிப்புக்கள் இன்றியும் செயற்பட அனுமதிப்பதன் மூலம் அவை தனது பணிகளை முழுமையாக ஆற்ற வழிகிடைக்கும்.

இறுதியாக யாழ்ப்பாணக் கைத்தொழிலின் இன்றைய நிலை என்ன? என்ற வினாவுக்கு விடை காண முனைவோமாயின், யாழ்ப்பாணக் கைத்தொழில்கள் சந்தித்த பின்னடைவுகள், எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பன பல. ஆயினும்- இப்பிரச்சினைகளைத் தீர்க்க எடுத்த நடவடிக்கைகள் சொற்பம் என்பதோடு, அவையும் ஆமைவேகத்திலேயே நடைபெறுகின்றன என்பதே வெளிப்படை. இந்நிலை தொடருமாயின்- யாழ்ப்பாணக் கைத்தொழில் வளர்ச்சி என்பது வெறும் பகற்கனவாகவே முடியும். எனவே, என்று இக்கைத்தொழில்களை வளர்ப்பதற்கான, புனரமைப்பதற்கான திட்டங்கள் விரைவாகவும், ஒழுங்காகவும் மேற்கொள்ளப்படுகின்றதோ, அன்று தான் குடாநாடு- கைத்தொழில்கள் வளர்ச்சிப்பாதையில் காலடி எடுத்து வைக்கும் என்பது மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மை!

இயேசுநாயகம்
ஜெயசுதன்

# தொழில்வங்கி



| | | |
|---|---|---|
| நிறுவனம்:- | சர்வோதய சமூக அபிவிருத்தி நிலையம் | நோர்வேஜிய மக்கள் உதவி அமைப்பு |
| வெற்றிடமாக உள்ள பதவிகள்:- | மொழிபெயர்ப்பாளர், வள அபிவிருத்தி உத்தியோகத்தர், திட்ட இணைப்பாளர். | கணக்காளர், அலுவலக முகாமையாளர். |
| அடிப்படைத் தகுதிகள்:- | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம். | கணக்கியல் டிப்ளோமா. |
| விண்ணப்ப முடிவு திகதி | 08-02-2003 | 01-02-2003 |

தொழில் வங்கியில் வரும் விடயங்கள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர்-
" நமது ஈழநாடு"
அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.
- திருக்குறள்-

# நமது நோக்கு

## நம்பியாரின் நாடகம்...?

உயர்பாதுகாப்பு வலயங்களில் - இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்கென அரசாங்கத்தரப்பு ஆலோசனை கோரியிருந்தபடி, இந்திய இராணுவ உயரதிகாரியால் வழங்கப்பட்ட முதற்கட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளும், விதிகளும்- விடுதலைப் புலிகளால் முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்டுவிட்டன.

இராணுவ நடவடிக்கைகளால் மக்களைத் தமது சொந்த வீடு வாசல்களிலிருந்து துரத்தியடித்து விட்டு, அவர்களது குடிமனைகளை இராணுவப் பாசறைகளாக்கி - அதற்கு 'உயர்பாதுகாப்பு வலயம்' எனப் பெயரிட்டுவிட்டு -

அமைதிச் சூழலொன்று ஏற்படுத்தப்பட்டு வருகையில் கூட, அந்த மக்களை தமது சொந்த வாழ்விடங்களுக்குச் செல்வதைத் தடுக்கும் இராணுவத்திற்குச் சாதகமாகவும் -

இந்த விடயத்திற்கு எவ்வகையிலும் தொடர்பற்றதாக - விடுதலைப் புலிகள் தமது கனரக ஆயுதங்களைக் களைய வேண்டும், முன்னரங்கக்காவல் நிலைகளைப் பின்னகர்த்த வேண்டும் எனவும் நிபந்தனைகளை விதித்த 'இராணுவ வல்லுநரின்' அறிக்கை விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்பட்டதில் வியப்பேதுமில்லை என்றே சொல்லலாம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் - மக்களது சுமுக வாழ்வும், அவர்களது மீள்குடியமர்வும் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்ட நிலையில் -

அதற்கான புறச்சூழ்நிலைகளை உருவாக்குவதில் சிரத்தையோ, தளர்வுகளோ காட்டாது -

விடுதலைப் புலிகளின் போரிடும் வலுவோடு பிணங்கிக் கொள்ள முனைவதானது - புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறுவதான செயல் என்பது மட்டுமல்ல -

மக்களது சுமுக வாழ்க்கைக்கும் அதனூடாகவே பெறப்பட வேண்டிய நிரந்தர அமைதிக்கும் விழுந்த அடியுமாகும்.

லெப்ரினன்ட் ஜெனரல் சதீஸ் நம்பியாரின் அறிக்கையினை ஒத்ததாகவே - அண்மையில் வெளியிடப்பட்ட யாழ்.பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் அறிக்கையும்- அதனோடு வெளியிடப்பட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஜெனரல் புறாவ் ஹொவ்டேயின் கருத்துக்களும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.பிராந்திய இராணுவத் தளபதியின் கருத்துக்களை எடுத்துக் கொண்டால் - சதீஸ் நம்பியாரின் அறிக்கையிலுள்ள விடயங்கள் ஏற்கனவே இருந்த இராணுவத்தின் நிலைப்பாட்டிற்குத் துணை செய்வதாகவே அமைந்துள்ளதையும் கவனிக்கலாம்.

அல்லது - சதீஸ் நம்பியாரிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனையின் பிரதிபலிப்பாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் அறிக்கையிலுள்ள விடயங்களும் வலியுறுத்தப்பட்டிருக்கலாம்.

எது எவ்வகையாயினும் - மக்களது மனிதாபிமானப் பிரச்சினைகளைக் கருத்திலெடுக்காது - இராணுவ நலனை முன்னிறுத்தும் தன்மையானதாகவே படையினரது பாதுகாப்பை மட்டும் கவனத்திற் கொண்டதாகவே இந்தத் தொடர் அறிக்கைகள் வெளிவந்திருக்கின்றன.

அதிலும் - மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவினது யோசனைகள் விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்பட்டதன் பின்னரும், அதே நிபந்தனைகளைக் கொண்டதாகவே சதீஸ் நம்பியாரின் அறிக்கையும் அமைந்திருப்பது - இதன் பின்னணி விடயங்கள் பற்றிய சந்தேகங்களைத் தோற்றுவிக்கிறது.

அதாவது - சதீஸ் நம்பியார் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்ட ஆரம்ப விஜயங்களின் பின்னரே - சரத் பொன்சேகாவின் அறிக்கை வெளியிடப்பட்டதால் - சதீஸ் நம்பியாரின் ஆலோசனைகளை சரத் பொன்சேகா மூலம் முன்னோட்டமாக வெளிப்படுத்தி, விடுதலைப் புலிகளின் எதிர்வினைகளை அறிவதற்கான முயற்சி நடந்ததா என்ற சந்தேகம் எழுவதும் இங்கு கவனிக்கத்தக்கது.

இரண்டாவது - சதீஸ் நம்பியாரின் முதற்கட்ட அறிக்கை எனப்படுவது உண்மையில் - முதற்கட்டமாக வெளியிடப்பட்ட அறிக்கையல்ல - அதுவே இறுதியான அறிக்கை என்பதாகும்.

இந்த இரண்டு விஷயங்களிலும் உண்மைகள் இருப்பதாகவே அரசாங்கத்திற்கு நெருங்கிய வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

ஏனெனில் - சதீஸ் நம்பியாரின் ஆலோசனையைப் பெறப்போவதாக தாய்லாந்தில் வைத்து அரசாங்கம் அறிவித்தபோதே - சதீஸ் நம்பியாரின் ஆலோசனை ஏற்கனவே அரசாங்கத்துக்கு/இராணுவத்துக்கு கிடைத்துவிட்டதை, தற்போது கொழும்பு ஊடகங்கள் வெளியிட்டு வரும் செய்திகளிலிருந்து அறியமுடிவதுடன்,

தாய்லாந்துப் பேச்சுக்களுக்குப் பின்னரும் சதீஸ் நம்பியார் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்து - பிரதமரை சந்தித்துச் சென்றிருப்பதும் - ஒரு திரைமறைவு நாடகம் நடைபெற்றதான சந்தேகத்தையே உறுதிப்படுத்துவதாக அமைகின்றது.

சதீஸ் நம்பியாரின் இறுதி அறிக்கைக்காக, ஊடகங்கள் வழியாக ஒரு எதிர்பார்ப்பு நிலையை உருவாக்கிவிட்டு, அதே நேரத்தில் - முதற்கட்ட அறிக்கையின் சாராம்சங்களை ஊடகங்களுக் கூடாக கசியவிட்டதன் பேரில் - சதீஸ் நம்பியாரின் அறிக்கை விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்படக் கூடிய விடயங்களையே ஆலோசனைகளாகத் தந்திருப்பது தெரிந்தும், அதற்கான விடுதலைப் புலிகளின் எதிர்வினைகளை அறிவதில் அரசாங்கமோ/இராணுவமோ முயற்சிகளை மேற்கொண்டிருக்கலாம் எனவும் கருதிக்கொள்ள இடமிருக்கிறது.

எது எவ்வாறாயினும் - கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் அறிவிப்பும் விளக்கமும் - விடுதலைப் புலிகளது நிலைப்பாட்டினை மிகத் தெளிவாக்கியிருப்பதுடன், சர்வதேசத்திற்கும் இந்த விவகாரத்தின் உண்மை நிலையை அழுத்தமாக எடுத்துச் சொல்லியிருக்கின்றது. இனி இந்த விவகாரத்தை அரசாங்கம் எவ்வாறு முன்னெடுக்கப்போகின்றது என்ற பாரியவினாவும் இந்த அறிவிப்பினூடு அரசாங்கத்தைச் சார்ந்ததாகவே அமைகின்றது.

# இலங்கையில் சமாதானச் சூழல் நிலவிவருவதால் செஞ்சிலுவைச் சங்கப் பணிகள் மட்டுப்படுத்தப்படும்!



ஹயின்ஸ் பீற்றர் ஹென்றி

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தற்பொழுது சமாதானச் சூழல் நிலவி வருவதால் 1989 முதல் செயற்பட்டு வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் செயற்பாடுகள் இவ்வருடம் முதல் மட்டுப்படுத்தப்படும் என, தனது பணிக்காலத்தை நிறைவு செய்து ஜெனிவாவிற்கு இடமாற்றம் பெற்று செல்லும் செஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதி சிசில் கிரோங் தெரிவித்துள்ளார். நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அலுவலகத்தில், உள்ளூர்ப் பத்திரிகையாளருக்கு தனக்குப் பின் வதிவிடப் பிரதிநிதியாக பதவியேற்றுள்ள ஹெயின்ஸ் பீற்றர் ஹென்றிச்சை அறிமுகப்படுத்திய நிகழ்வின்போதே சிசில் கிரோங் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வவுனியா, மல்லாவி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அலுவலகங்களை அமைத்து செயற்படுகின்றது. யுத்த காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பணியாகும். இதனடிப்படையில் நாம் இலங்கையிலும் 1989 முதல் செயற்பட்டு வருகின்றோம்.

கடந்த காலங்களைப் போலல்லாது - தற்பொழுது சமாதானச் சூழ்நிலை நிலவுகின்றது. இக்காலகட்டத்தில் இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கேட்டுக் கொண்டதற்கிணங்க, யுத்தத்தின்போது காணாமற் போனோர் பற்றிய விடயத்தில் எதிர்வரும் காலத்தில் அக்கறை செலுத்த இருக்கின்றோம். இதற்கென விசேட செயலணிக்குழுவை அமைத்துச் செயற்படவுள்ளோம்.

அதேபோல், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு உள்நுழையும் இராணுவச் சோதனைச் சாவடிகளான மன்னார், உயிலங்குளம், முகமாலை ஆகிய இடங்களில் பயணிகள் போக்குவரத்து சுமுகமாக இடம்பெறுவதை உறுதி செய்வதும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதான பணிகளில் ஒன்றாகவுள்ளது.

இவற்றினை விட, கடந்த காலங்களைப் போன்று, கைதிகளைச் சிறைச்சாலைகளில் சந்தித்தல், மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பட்டயம் பற்றி ஆயுதம் தரித்தோருக்கும், பாடசாலை மாணவருக்கும் விளக்கம் அளித்தல் போன்ற செயற்பாடுகளில் தொடர்ந்தும் செயற்படவிருக்கிறோம்.

மேலும், வன்னிப் பெருநிலப்பரப்பு நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் மேற்கொண்டு வந்த நடமாடும் சுகாதார சேவைகள் உரிய அமைச்சு பொறுப்பேற்பதனை தொடர்ந்து நாம் அதனைக் கைவிடுகின்றோம் என்றும் சிசில் தெரிவித்தார்.

இப்பத்திரிகையாளர் சந்திப்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்கை அவயவம் பொருத்தும் நிபுணர் அன்றா சிமித் செயற்கை அவயவங்களை உற்பத்தி தொடர்பாக ஜெய்ப்பூர் நிறுவனத்துக்கு வழங்கும் உதவிகள் பற்றி விளக்கம் அளித்தார்.



நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள்.

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடக இணைப்பாளர் டனாலிங்ஸியும் கலந்துகொண்டார்.

# நுணாவில் தள விஸ்தரிப்பால் பயிர்ச்செய்கை பாதிக்கப்படும்!

## மக்கள் மத்தியில் எழும் பீதியும் விசனமும்

கைதடி, நுணாவில் பகுதியில் புதிதாகப் படையினரால் அமைக்கப்பட்டுவரும் முகாம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருவதால்- எதிர்காலத்தில் இப்பகுதி விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபடமுடியாது போய்விடுமென மக்கள் பீதியும், கவலையும் தெரிவித்துள்ளனர்.

கண்டி வீதிக்குத் தெற்குப்புறமாக அமைக்கப்படும் இம்முகாமை படையினர் மேலும் தெற்குப்புறமாகக் கைதடி, நாவற்குழி வயற்பகுதியை நோக்கி விஸ்தரித்துப் பெருந்தளமாக மாற்றி அமைத்து வருகின்றனர்.

இதன் காரணமாக எதிர்காலத்தில் பயிர்ச்செய்கை தடைப்பட வாய்ப்புள்ளதால் சம்பந்தப்பட்டோர் இதைக் கவனத்தில் எடுக்கவேண்டுமென விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## தென்மராட்சியில் அனுமதியின்றி பெருகி வரும் கட்டடங்கள்!

தென்மராட்சிப் பிரதேசத்தில் கட்டடங்கள் அமைப்பதைக் கண்காணிக்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபை இயங்காததால், இப்பகுதியில் உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதியின்றிப் பல கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதைக் காண முடிகிறது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் தென்மராட்சியிலுள்ள பெரும்பாலான கட்டடங்கள் பாரிய சேதத்திற்குள்ளாகின. தற்போது இக்கட்டடங்களைப் புனரமைப்போர்- எல்லைச் சுவர்களையும் புதிய கட்டடங்களையும் உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதியின்றி அமைத்து வருகின்றமையால், போக்குவரத்தில் பல இடையூறுகளை எதிர்நோக்கவேண்டியுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர். (34)

அமைச்சர் திஸநாயக்க மீதான வழக்கு

## ஜனாதிபதிக்கு விபரங்களை இரகசியமாகக் கடத்திய அதிகாரி

(கொழும்பு)

சமுர்த்தி அமைச்சில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்த- அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் பொலிஸ் அதிகாரி ஒருவர் ஜனாதிபதி சந்திரிகாவை இரகசியமாகச் சந்தித்துள்ளார்.

இச்சந்திப்புக் குறித்து குற்றப் புலனாய்வுப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இரகசியக்காப்புப் பிரமாணங்களைக் குறித்த அதிகாரி மீறியதான குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த விசாரணைகள் நடத்தப்பட்டுவருகின்றன.

அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க உள்துறை அமைச்சுக்குத் தெரிவித்த முறைப்பாட்டின் அடிப்படையில்தான் இந்த விசாரணைக்கு உத்தரவிடப்பட்டதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

விசாரணைகளின்போது தாம் பொலிஸ் அதிகாரிகளுக்குச் சமர்ப்பித்த இரகசிய ஆவணங்கள் சில ஜனாதிபதியின் கைக்குக் கிடைத்திருப்பதாகவும் அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க தெரிவித்திருக்கிறார். (01)

## யாழ். முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்வு

யாழ்.முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றம் தொழில் அபிவிருத்திக்கு மற்றும் நஷ்டஈடுகள் பெறுவது தொடர்பான கூட்டமொன்று நேற்றுமுன்தினம் யாழ்.மஸ்ரஉத்தின் பாடசாலையில் எம்.ஆர்.நௌஷாத் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொதுமக்கள் தாங்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் பற்றி எடுத்துக்கூறினர்.

தொழில்ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் மீளக்குடியேறும் பொழுது குடியேறுவதற்கான இடப்பிரச்சினை, பாதுகாப்பு, கௌரவமான வாழ்வு, நஷ்டஈடு, நிவாரணம், காணாமற்போனவர்களின் நிலை, முஸ்லிம் வட்டாரத்தினுள் தற்போது குடியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களில் பலர் கசிப்புக் காய்ச்சுதல் மற்றும் விற்றல் போன்ற சமூகச் சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபடுவதான குற்றச்சாட்டுப் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

சமாதான உடன்படிக்கையின்பின், சென்ற வருடம் ஏப்ரல் மாதம் பாதை திறப்பின்பின் - யாழ்.முஸ்லிம்கள் தங்களின் வியாபாரத்தை முன்வைத்து மீள்குடியேற்றத்தைத் தொடர விரும்பிக் குடியேறியபோதும், இதுவரை உரிய நிவாரணம் எதுவும் முழுமையாக வழங்கப்படவில்லை எனவும் அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் வட மாகாண இடம்பெயர்ந்த முஸ்லிம் அமைப்பின் தலைவர் எம்.ஏ.சி.முபீன், யாழ்.மாவட்ட ஜம்மியதுல் உலமா சபைத்தலைவர் மௌலவி, பீ.ஏ.எஸ் சுபீயான் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## 75 பௌத்த, கிறிஸ்தவ மதகுருமார் யாழ்ப்பாணத்துக்கு சமாதான விஜயம்

வடக்குத் தெற்கு மக்களுக்கான உறவுகளை வளர்க்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டத்துக்கமைய 75 பௌத்த, கிறிஸ்தவ மதகுருமார் யாழ்ப்பாணத்துக்கு விஜயத்தை மேற்கொண்டிருக்கின்றனர்.

வண.தெல்தெனிய சுவர்ணஜோதி தேரர் தலைமையில் யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொண்டுள்ள இக்குழு சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் குறித்த பணிகளில் ஈடுபடும்.

அத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள விகாரைகளுக்குச் சென்று தரிசிப்பதுடன் அவற்றைப் புனரமைப்பது குறித்தும் ஆராய்ந்து இக்குழு அறிக்கை சமர்ப்பிக்கும்.

# தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்க யாழ்ப்பாணத்தில் நோய்த்தடுப்புப் பிரிவு

## சிரேஷ்ட வைத்திய அதிகாரி பொறுப்பாக இருப்பார்

யாழ்.மாவட்டத்தில் தொற்று நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்காக தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

குடாநாட்டில் வேகமாகப் பரவி வருகின்ற வைரஸ் காய்ச்சல், டெங்கு, மலேரியா போன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும், நோய் தொற்றுதலைத் தடுப்பதற்காகவும் மேற்படி பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் இத்தொற்று நோய்த் தடுப்புப் பிரிவை ஆரம்பித்திருககின்றது. இந்தப் பிரிவுக்குச் சிரேஷ்ட வைத்திய அதிகாரி சிவபாதம் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தற்போது குடாநாட்டில் முழு அளவில் செயற்பட ஆரம்பித்துள்ளது.

தொற்றுநோய்கள் சம்பந்தமாக அனைத்து விபரங்களையும் இப்பிரிவு திரட்டி வருகின்றது. அத்துடன் தொற்றுநோய்களைத் தடுத்து நிறுத்துவதற்குச் சாத்தியமான நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்து வருகிறது. (ச,க)

# வலி. வடக்கு பிரதேச சபை கூட்டத்தில் குழப்பம்

## பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு

வலி - வடக்குப் பிரதேச சபையின் தீர்மானங்களை நிறைவேற்றும் கூட்டத்தில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்து குழப்பநிலை ஏற்பட்டது. இதையடுத்து இது தொடர்பாகப் பிரதேசசபைச செயலாளர் சுன்னாகம் பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று நடைபெற்ற இக்கூட்டத்தில் - மேற்படி பிரதேச சபையில் கடந்த 10 மாதங்களாகச் சம்பளம் எதுவுமற்ற நிலையில் கடமையாற்றிய 7 மின் ஊழியர்களும் தமது பதவி, சம்பளம் என்பவற்றை உறுதிப்படுத்தித் தருமாறு கோரியதையடுத்தே கூட்டத்தில் குழப்ப நிலை ஏறபட்டது. (68)

## கத்தோலிக்கப் பிரிவு புகுமுக மாணவர் வரவேற்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகக் கத்தோலிக்கப் பிரிவு புகுமுக மாணவர் வரவேற்பு உபசார விழா நாளைமறு தினம் காலை 9 மணிக்கு நல்லாயன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(ச)

# 3 முக்கிய அமைச்சர்கள் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை!

## பொ.ஐ.மு. கூட்டத்தில் தீர்மானம்

அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, ஜயலத் ஜெயவர்த்தன, திலக் மாரப்பன ஆகியோர் மீது அடுத்தமாதம் முதல் வாரத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன. ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நடைபெறும் கட்சித் தலைவர்களுக்கான கூட்டத்தில் இதுவரைகாலமும் மங்கள சமரவீர, மகிந்த ராஜபக்ஷ, நிச்சட் பத்திரன ஆகியோரே பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் கலந்துகொண்டு வந்தனர்.

இவர்களில் நிச்சட் பத்திரன அரசாங்கத்திற்கு ஆதரவாக முடிவுகளை மேற்கொண்டு வருகின்றார் என்ற குற்றச்சாட்டு கிளப்பப்பட்டதால், தனது இடத்திற்கு அநுரா பண்டாரநாயக்கவை நியமிக்குமாறு கோரியிருந்தார். இக்கோரிக்கையை ஏற்று, நிசசட் பத்திரனவிற்குப் பதிலாக, அநுரா பணடாரநாயக்காவே பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொள்வதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.(01)

## அபிவிருத்திப் பொருளியல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகப் பொருளியல் துறையினால் வெளியிடப்படும் அபிவிருத்திப் பொருளியல் - இதழ் மூன்று வெளியீட்டு விழா இன்று மாலை 3 மணிக்குப் பொருளியல் துறை மண்டபத்தில் கே.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச)

## நன்னீர் விநியோகம் இடைநிறுத்தம்

# வடமராட்சி கரையோரப் பகுதியில் குடிநீருக்கு அலையும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்குக் கரையோரப் பகுதியில் வாழும் கடற்தொழிலாளர் குடும்பங்களுக்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வந்த நன்னீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இந்தப் பகுதிக் குடியிருப்பாளர்கள் குடிநீருக்கு அலைந்து திரிகின்றனர்.

1998 ஆம் ஆண்டு காங்கேசன்துறை, மயிலிட்டி, சேந்தாங்குளம், வலித்தூண்டல், பலாலி, வளலாய் ஆகிய கிராமங்களிலிருந்து வெளியேறிய மீனவர்கள் வடமராட்சி வடக்குக் கரையோரப் பகுதிகளில் முகாம்களில் வசித்து வருகின்றனர்.

அவர்கள் இந்தப்பகுதியில் குடியேறியதை அடுத்துக் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது.

இவர்களுக்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறைப் பிரதேசசபையினால் சுப்பர்மடம், இன்பருட்டி, சக்கோட்டைப் பகுதிகளில் பொதுமக்களுக்கு வசதியாகக் கொள்கலன்கள் பொருத்தி வைக்கப்பட்டு நீர் விநியோகிக்கப்பட்டு வந்தது.

மேற்படி இடம்பெயர்ந்த மக்கள் இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாதமையால் கரையோரப் பகுதி முகாம்களில் தங்கியுள்ளனர்.

இம்மக்களுக்கான நீர் விநியோகமே தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

நீர் விநியோகத்துக்கென ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் பருத்தித்துறைப் பிரதேசசபைக்கு வழஙகப்பட்டு வந்த நிதி வழங்கப்படாமையால் இந்த நீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இடம்பெயர்ந்து சொந்த இடங்களுக்கு மீளக் குடியேற முடியாத நிலையில் இருக்கும் தமக்கு, வழங்கப்பட்டு வந்த குடிநீர் விநியோகத்தினை மீண்டும் வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் பருத்தித்துறைப் பிரதேசசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)




நமது ஈழநாடு வழங்கும்




உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: RATNAGOPALS இரத்தினகோபால்ஸ்

63, 65, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

ஃகீறோ ஃகொண்டா மோட்டார் சைக்கிளின்

யாழ்ப்பாண விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

மூன்றாம் பரிசு - 10,000



வழங்குவோர்: சந்திரா மல்ரிகோட்டார்

531, பருத்தித்துறை வீதி, நல்லூர்,

பிரதான வீதி, பண்டத்தரிப்பு

Fancy goods, gift items, fevicryl & acron paint



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!

வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!



உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை நிரப்பி, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ........................
வயது: ........................
முகவரி: ........................



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




# நமீபியா அணி

### பியோன் லியோ கோட்ஸ்

*பிறந்தது:-* 11.12.1978 வின்ட்கொக் (நமீபியா)
*சுருக்கமாக:-*பியோன் கோட்ஸ்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை மிதவேகப்பந்து வீச்சாளர். முதற்தர ஆட்ட அனுபவங்கள் இல்லை. 2003 ஜனவரி வரையில் ஒருநாள் போட்டிகள் 9 இல் ஆடியவர். 76 ஓவர்களில் 22 விக்கெட் பெற்றவர். 13 ICC கிண்ணப் போட்டிகளில் ஆடி 368 ஓட்டங்கள் பெற்றவர். 80 ஓவர்கள் பந்துவீசி 11 விக்கெட் பெற்றவர்.

### அன்ட்ரீஸ் ஜொஹானஸ் பேர்கர்

*பிறந்தது:-* 25.8.1981 (தென்னாபிரிக்கா)
*அணி:-* நமீபியா
*சுருக்கமாக:-* S.B.பேர்கர்.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். LEG BREAK பந்துவீச்சாளர். 27.1.2003 வரை 8 ஒருநாள் போட்டிகளில் விளையாடி, 108 ஓட்டங்கள் பெற்றவர். 41 அதிகூடிய ஓட்டங்கள். ICC கிண்ணப் போட்டிகளில் 7 ஆட்டங்களில் 127 ஓட்டங்கள் பெற்றவர்.

### பிறையன் கெவின் முர்காட்றொய்ட்

*பிறந்தது:-* 19.10.1969 (நமீபியா)
*அணிகள்:-* நமீபியா
*சுருக்கமாக:-* பிறையன் முர்காட்றொய்ட்.
வலதுகைத் துடுப்பாட்டவீரர். ஒருநாள் அனுபவம்- 8 ஆட்டங்கள் 192 ஓட்டங்கள். அரைச்சதம் ஒன்று. ICC கிண்ண விபரம்- 23 ஆட்டங்கள் 603 ஓட்டங்கள், ஒருசதம், 3 அரைச்சதங்கள்.

### பேர்ட்டன் ஒலிவர் வன்ரூய்

*பிறந்தது:-* 9.7.1982 (நமீபியா)
*அணிகள்:-* நமீபியா.
*சுருக்கமாக:-* பேர்ட்டன் வன்ரூய்.
வலதுகைத் துடுப்பாட்டவீரர். வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர். ICC கிண்ண அனுபவம்- 8 ஆட்டங்கள்.

### லெனி லியானார்டோஸ் லோவ்

*பிறந்தது:-* 19.6.1959 (நமீபியா)
*அணிகள்:-* நொதன்ஸ் கழகம், கிரிக்லாண்ட் வெஸ்ட்கழகம், மேற்குமாகாணம், நமீபியா.
*சுருக்கமாக:-* லெனி லோவ்.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். இடதுகை ORTHODOX. இடதுகை மிதவேகம். இருவகைப் பந்துவீச்சாளர். ஒருநாள் போட்டிகள்- 10 ஆட்டம், 70 ஓட்டங்கள். ICC கிண்ணப் போட்டிகள்- 17ஆட்டங்கள், 190 ஓட்டங்கள், இரண்டு அரைச் சதங்கள்.

### ஜெரி ஸ்நைமன்

*பிறந்தது:-* 30.04.1981 (வின்ட்கொக்)
*அணிகள்:-* நமீபியா
*சுருக்கமாக:-* ஜெரி நைஸ்மன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர். பந்து வீச்சு- 52 ஓவர்களில் 10 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

### டியோன் பொஸ்மன் கோட்ஸ்

*பிறந்தது:-* 12.09.1973 - (வின்ட்கொக்)
*அணிகள்:-* நமீபியா
*சுருக்கமாக:-* டியோன் கோர்ட்ஸ்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை OFF BREAK பந்து வீச்சாளர். ஒருநாள் போட்டி அனுபவம்- 10 ஆட்டங்கள், 231 ஓட்டங்கள், ஒரு அரைச்சதம். ICC கிண்ண அனுபவம்- 15 ஆட்டங்கள், 291 ஓட்டங்கள், இரண்டு அரைச்சதங்கள். சிறந்த களத்தடுப்பு வீரர்.

### டானியல் கியூல்டர்

*பிறந்தது:-* 2.8.1973. (நமீபியா)
*அணிகள:-* நமீபியா.
*சுருக்கமாக:-* டானியல் கியூல்டர்.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை OFF BREAK பந்துவீச்சாளர். ஒருநாள் அனுபவம்- 10 ஆட்டங்கள், 237 ஓட்டங்கள், ஒரு அரைச்சதம். ICC அனுபவம்- 21 ஆட்டங்கள், 620 ஓட்டங்கள், ஒருசதம், நான்கு அரைச்சதங்களை குவித்தவர். இம்முறை அதிகமாகவே எதிர்பார்க்கப்படுபவர்.

### லூயிஸ் ஜேக்கபஸ் பேர்ஜர்

*பிறந்தது:-* 12.3.1978 (நமீபியா)
*அணிகள்:-* நமீபியா
*சுருக்கமாக:-* லூயிஸ் பேர்ஜர்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர். ICC கிண்ண அனுபவம்: 7 ஆட்டங்கள், 111 ஓட்டங்கள், கூடிய ஓட்ட எண்ணிக்கை 41 (ஆட்டமிழக்காமல்)

### மெல்ட்வேன் ஸ்கூர்

*பிறந்தது:-* 8.12.1967 (தென்னாபிரிக்கா)
*அணிகள்:-* நமீபியா
*சுருக்கமாக:-* மெல்ட்வேன் ஸ்கூர்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். விக்கெட்டுக் காப்பாளர். ICC அனுபவம்: 22 ஆட்டங்கள், 297 ஓட்டங்கள், ஒரு அரைச்சதம.

### மோர்ன் கார்க்

*பிறந்தது:-* 12.07.1977 (வின்ட்கொக்)
*அணிகள்:-* நமீபியா
*சுருக்கமாக:-* மோர்ன் கார்க்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். விக்கெட் காப்பாளர். ஒரு நாள் போட்டிகள்: 6 ஆட்டம், 88 ஓட்டம், ஒரு அரைச்சதம். ICC கிண்ண அனுபவம்: 15 ஆட்டங்கள், 261 ஓட்டங்கள், 3 அரைச்சதம்.

### நயான் வோல்டர்ஸ்

*பிறந்தது:-* 10. 8. 1980 (நமீபியா)
*அணிகள:-* நமீபியா
*சுருக்கமாக:-* நயான் வோல்டர்ஸ்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். ஒருநாள் போட்டிகள்: 8 ஆட்டம், 161 ஒட்டம். ICC கிண்ண அனுபவம்- 8 ஆட்டம், 268 ஓட்டம், இரண்டு அரைச்சதங்கள்.

### ருடொல்ப் ஜான்ஸ் வான் வியூரன்

*பிறந்தது:* 20.9 1972 (வின்ட்கொர்க் நமீபியா)
*அணிகள்:* நமீபியா
*சுருக்கமாக:* ரூடி வான் வியூரன்
வலதுகைத் துடுப்பாட்டவீரர். வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர். ஒருநாள் மற்றும், ICC கிண்ணப் போட்டிகளில் 23 ஆட்டங்களில் ஆடியவர்.

### சேரல் பிரான்கொய்ஸ் பேர்கர்

*பிறந்தது:-* 13.02.1983
*அணிகள்:-* நமீபியா
*சுருக்கமாக:-* சேரல் பேர்கர். வலதுகைத் துடுப்பாட்ட வீரர் வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர். 5 ஆட்டங்கள் அனுபவம் கொண்ட இளம்வீரர்.

### ஸ்ரீபன் ஜேக்கபஸ் சுவான்போல்

*பிறந்தது:-* 2.12.1981 (நமீபியா).
*அணிகள்:-* நமீபியா
*சுருக்கமாக:-* ஸ்ரெபான் சுவான்போல்.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர், விக்கெட்காப்பாளர். ICC கிண்ணப் போட்டிகள் உட்பட 6 ஒருநாள் போட்டிகளின் அனுபவம் கொண்டவர்.

## இம்ரான்கான் இப்படிச் சொல்லுகிறார்




இமரான்கான், 92ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற பாகிஸ்தான் அணித் தலைவர். இன்று பாகிஸ்தானின் பாராளுமன்ற அங்கத்தவர். உலகக்கிண்ணம் 2003 பற்றி சில எதிர்வு கூறல்களை வெளிப்டுதித்தியுள்ளார். முன்னதாக எந்த அணி அழுதஙங்களுக்குப் பணியாமல் விளையாடுமோ அதுவே வெற்றி இலக்கை அடையும் எனறார். அவுஸ்திரேலிய அணியில் இருந்து ஸ்ரீவ் வோ நீக்கப்பட்டிருக்கவே கூடாதென்கிறார். அழுத்தம் நிறைந்த சூழ்நிலைகளில் ஆட்டத்தை வழிநடத்துவதில் அவர் வல்லவர் என்கிறார். தனது எதிர்வுகூறலில்- அவுஸ்திரேலியாவையே வெற்றி பெறும் அணியாக இம்ரான்கான் சுட்டிக்காட்டுகின்றார். எனினும்- இங்கிலாந்தும், நியூசிலாந்தும் சில ஆச்சரியங்களை நிகழ்த்தலாம் என்கிறார். தனது சொந்த நாட்டின் அணியான பாகிஸ்தான் பற்றிக் குறிப்பிடுகையில் போராடும் குணம் குறைந்து விட்டதாகக் சாடுகின்றார். இருந்தபோதும், வசீம் அக்ரம், சயீட் அன்வர், சோஹெய்ப் அக்தார் போன்றவர்கள் அணியில் இருப்பது அணிக்கு மிகப்பலம் என்பதை ஒப்புக் கொள்கின்றார். இம்ரானின் கருத்துக்கள் எழுந்தமானமாக வருவதில்லை. அவர் கிரிக்கெட் உலகின் மங்காத நட்சத்திரம். அவரின் வாக்கு அவுஸ்திரேலியாவிற்கு. உங்கள் தெரிவு எந்த அணிக்கு? ஏன் தெரிவு செய்கிறீர்கள்? எழுதியனுப்புங்களேன்.

**இம்ரான்கான் சொல்வது மற்ற அணிகளுக்குக் கேட்கிறதா?**

### நாளும் ஒரு வினா


உலகக் கிண்ண வரலாற்றில் முதல் பந்தை வீசிய வீரர் யார்?

**மதன்லால் - இந்தியா**

## காலத்தின் பதிவுகளிலிருந்து..



அதிரடி அணித்தலைவர் கிளைவ் லொயிட் அமைதியாக முதலாவது உலகக்கிண்ணத்துடன் .




அந்தமாதிரி விளாசலுக்கு றிச்சட்ஸை விட்டால் வேறுயார்..?

**WORLD CUP 1975**



கிளைவ் லொயிட்டிற்கு செஞ்சரி சாதாரண விடயம் (102 அடித்தபோது)



விவியன் றிச்சட்ஸுக்கு யாருடைய விக்கட்டாக இருந்தாலென்ன அல்வாதான்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சதீஸ் நம்பியாரின் அறிக்கை அரசுக்குக் கிடைக்கவில்லை

## என்கிறார் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ்

உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான- ஓய்வுபெற்ற இந்திய ராணுவத்தளபதியின் அறிக்கை இன்னமும் அரசாங்கத்திற்கு கிடைக்கவில்லையென அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

அங்கு விளக்கமளித்த அமைச்சர், உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகின்றது. இராணுவத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இராணுவத் தொழில்நுட்ப ரீதியான தகவல்களை அரசாங்கம் திரட்டி வருகின்றது.

அதற்காகவே சதீஸ் நம்பியாரின் அறிக்கையையும் அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. இராணுவத்தளபதி சதீஸ் நம்பியாரின் அறிக்கை இன்னமும் அரசாங்கத்திற்கு கிடைக்கவில்லை என்றார்

நம்பியாரின் அறிக்கை தொடர்பாக புலிகள் நிராகரித்து அறிக்கை வெளியிட்டமை குறித்து அமைச்சர் அபிப்பிராயங்கள் எதனையும் தெரிவிக்கவில்லை. அடுத்த சுற்றுப்பேச்சுவார்த்தையிலும் உயர் பாதுகாப்பு விடயங்கள் குறித்து பேசப்படும் என்றும் அமைச்சர் சொன்னார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை அடுத்த மாதம் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் ஜேர்மன் தலைநகர் பேர்ளினில் நடைபெறுமென அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

பேர்ளின் பேச்சுவார்த்தை முடிவடைந்த பின்னர் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வருவார் என்றும், புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக பேசி முக்கிய முடிவுகளை கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எடுப்பார் என்றும் குறிப்பிட்ட பீரிஸ் -.

பாலசிங்கத்தினது உடல்நிலையைக் கருத்திற்கொண்டே அடுத்த மாதம் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை இருதினங்களாக குறைக்கப்பட்டது. ஆனாலும், பேச்சுவார்த்தையின் முக்கியத்துவம் குறைந்துவிடாது என தெரிவித்த அவர், சமஷ்டி அரசியல் தீர்வு குறித்து பேர்ளினில் பேசவுள்ளதாகவும் சொன்னார்.

அத்துடன்- மனித உரிமை விடயங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு விடயங்களிலும் கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவித்தார். சர்வதேச மனித உரிமைகள் நிலையத்தின் தலைவர் இயன் மாட்டின் ஜேர்மனியில் நடைபெறவுள்ள பேச்சு வார்த்தையின் போது மனித உரிமை விடயங்கள் தொடர்பாக அரசிற்கும் புலிகளுக்கும் ஆலோசனை வழங்குவார் என்றும் அவர் கூறினார்.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளச்செய்யும் அரச பிரதிநிதிகளில் மாற்றம் எதுவும் இல்லையெனத் தெரிவித்த அமைச்சர், ஆலோசகர்களின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்றார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியுடன் ஒருவருடமாகின்றது. இதனை முன்னிட்டு நாடு முழுவதிலும் வைபவங்கள் இடம்பெறவுள்ளன. இந்த உடன்படிக்கையின் மூலம் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்திருக்கின்றது. இது அரசாங்கத்திற்கு கிடைத்த வெற்றியாகும் எனவும் அமைச்சர் பீரிஸ் நேற்று செய்தி யாளர்கள் மத்தியில் பேசும்போது கூறினார்.

## மிருசுவில் படுகொலை வழக்கு 5 படையினருக்கு விளக்க மறியல்

### உயர் நீதிமன்ற விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

மிருசுவில் பகுதியில் நடைபெற்ற படுகொலைச் சம்பவம் தொடர் பான வழக்கு விசாரணை நேற்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

லெப்ரினன்ட் தரத்தில் உள்ள ஒரு இராணுவ அதிகாரி உட்பட ஐந்து இராணுவத்தினர் மேற்படி படுகொலைச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாக நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து அவர்கள் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 10 ஆம் திகதி மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

இந்த வழக்கில் சாட்சியமளிப்பதற்காக நான்கு முக்கிய சாட்சிகள் யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்துவர வேண்டியிருப்பதாகவும், இவர்களுக்கான தகுந்த பாதுகாப்பை வழங்கவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(01)

### இனப்பிரச்சினை...

மேற்கொள்ளுவதற்கும் பிரித்தானியா விரும்புகின்றது. அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் அது குறித்து பிரித்தானியாவுடன் பேசியிருக்கின்றனர்.

நீண்டகால போரிற்கு உடனடியாக தீர்வு கண்டுவிட முடியாது. அவ்வப்போது ஏற்படுகின்ற முரண்பாடுகளை பெரிதுபடுத்தாது இலகுவில் இணங்கிச் செல்லக்கூடிய விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்று கூறிய அவர்,

உலக நாடுகளில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தங்களுக்கு தீர்வு காணப்பட்ட முறைகள் குறித்த பல உதாரணங்களை எடுத்து விளக்கினார். நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் நடைபெறும் பேச்சுவார்த்தை திருப்தியாகவுள்ளது. நீதியான தீர்வு ஒன்று கிடைக்கவேண்டும் அந்த நம்பிக்கை உள்ளது என்றும் அவர் கூறினார்.

கொழும்புக்கு விஜயம் செய்த பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் மைக் ஓ ப்ரெய்ன் நேற்று நண்பகல் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கை சந்தித்து சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து கேட்டறிந்து கொண்டதாகவும் தெரியவருகினறது. சுமார் ஒரு மணிநேரம் நோர்வேத் தூதரகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருக்கின்றது. அதேவேளை - இந்தியத்தூதுவர் நிருபம் சென்னையும் ப்ரெய்ன் இன்று சந்தித்திருக்கின்றார். நேற்று காலை கொழும்பு வந்த மைக் ஓ ப்ரெய்ன் அமைச்சர்களான பேராசிரியர் பீரிஸையும், மிலிந்த மொறகொடவையும் சந்தித்திருக்கின்றார்.

### பல்கலை...

வவுனியா வளாகத்தலைவர் எஸ்.மோகனதாஸ் 48 புள்ளிகளைப் பெற்று மூன்றாவதாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தப் பதவிக்காக யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி வசந்தி அரசரத்தினம், கிழக்குப் பல்கலைக்கழக கணிதத்துறை விரிவுரையாளர் எஸ்.கணநாதன், யாழ்.பல்கலைக்கழக மருத்துவத்துறையைச் சேர்ந்த டாக்டர்.வி.குணானந்தம், கொழும்பைச் சேர்ந்த பொறியியலாளர் வி.எஸ்.ராஜரத்தினம், பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற்துறைப் பேராசிரியர் எஸ்.ர்த்னசீலன் எச். கூல், பேராதனை பல்கலைக்கழக அரசியல்துறைப் பேராசிரியர் எஸ்.சிவராசா ஆகியோரும் போட்டியிட்டனர்.

வாக்கெடுப்பில் அதிகவாக்குகளைப் பெற்ற மூவரையும் பல்க லைக கழக மூதவை சிபார்சு செய்துள்ளது.

இவர்களின் தெரிவுகளை இன்று கொழும்பு செல்லும் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கையளிப்பார். இந்த வாக்கெடுப்பில் அதிக வாக்குகளைப் பெற்ற மூவரில் ஒருவரை ஜனாதிபதி தெரிவு செய்வார்.

அதேவேளை- தற்போது பதவியில் இருக்கும் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையின் பதவிக்காலம் அடுத்துமாதம் 25 ஆம் திகதியுடன் முடிவடைந்து ஓய்வுபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

### ஏ-9 வீதியை...

அதிகரிக்கப்பட்டுத் தார் போடப்படவுள்ளது. இது தவிர பாதையின் இரு மருங்கிலும் 1.2 மீற்றர் கிரவல் போடப்படவுள்ளது.

இது தொடர்பாக நேற்று வவுனியா - மன்னார் வீதியிலுள்ள பிரதம பொறியிலாளர் அலுவலகத்தில் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீதியைத் திருத்தவுள்ள 8 ஒப்பந்தக்காரர்களும் அழைக்கப்பட்டு பிரதம பொறியிலாளரால் விளக்கமளிக்கப்பட்டது.

திருத்த வேலைகள் பெப்ரவரி 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதன் முன்னேற்பாடாக பாதையிலுள்ள மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்படுகிறது.

### இந்தியாவில்...

கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் கப்பலிருந்து அரிசி இறக்கும் பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே கணிசமான நிறையுடைய அரிசி மாயமாக மறைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ்.செயலகம் இவ்விவகாரத்தை கையாள்வதற்காக அதிகாரிகள் குழுவொன்றை நியமித்தது. இவ் அதிகாரிகள் குழு கப்பலிலிருந்து இறக்கப்பட்ட அரிசியின் நிறையை கணிப்பீடு செய்து பார்த்தபோது 514.185 மெற்றிக்தொன் குறைவாக இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சுக்கு யாழ்.செயலகத்தினால் விபரமான அறிக்கையொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கப்பலில் ஏற்பட்ட அரிசிக்கு என்ன நடந்தது? என்பது பற்றி தற்போது அதிகாரிகள் மட்டத்தில் தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறது.

கடந்த ஒரு வாரமாக இவ் அரிசி விவகாரம் தொடர்பாக யாழ். செயலக அதிகாரி மட்டத்தில் புனர்வாழ்வு அமைச்சு அதிகாரி மட்டத்திலும் குழப்பமான நிலை நிலவி வந்தது.

இதனால் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய உலர் உணவு நிவாரணம் தாமதமடைந்திருந்தது.

நேற்றைய தினமே யாழ்.செயலகம், நிவாரண விநியோகத்திற்கு தேவையான அரிசியை தமது களஞ்சியத்திலிருந்து எடுத்துச் செல்லுமாறு அனைத்து பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அறிவித்தல் விடுத்துள்ளது.

(க,லி)

### சொந்த...

நண்பர்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இவ்வாறான குடும்பங்கள் மேற்படி கொடுப்பனவைப் பெறமுடியாத நிலை தற்போது தோன்றியுள்ளது.

மேற்படி கொடுப்பனவு விடயத்தில் அரசின் தற்போதைய அறிவிப்பினால் பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான குடும்பங்கள் இக்கொடுப்பனவை இழக்கும் நிலையில் உள்ளனர்.

(க,ச)

## நம்பியார் தயாரித்த அறிக்கைக்கு பொது அமைப்புக்கள் கடும் எதிர்ப்பு

உயர் பாதுகாப்பு வலயங்களில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக ஆராய்ந்த இந்திய இராணுவ முன்னாள் அதிகாரி ஜெனரல் சதீஸ் நம்பியார் அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையில்- புலிகளின் ஆயுதம் களையப்பட வேண்டும் எனக்கூறப்பட்டிருப்பதற்கு குடாநாட்டிலுள்ள பல பொது அமைப்புக்கள் பலத்த கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்திருக்கின்றன.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னர் , அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து படையினரை நகர்த்துவதற்கு புலிகளின் ஆயுதங்கள் களையப்படவேண்டும் என நம்பியார் அறிக்கை தயாரித்திருப்பதை வன்மையாகக் கண்டிப்பதாக கூறப்பட்டிருக்கின்றது.

இதேவேளை- யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தலைவர் சி.வி. கே.சிவஞானம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

நிபுணத்துவ ஆலோசனைகள் நடுநிலைமையானதாக இருக்க வேண்டும் என்பது சாதாரணமான எதிர்பார்ப்பு. ஆனால், நம்பியாரின் அறிக்கை அவ்வாறானதாக இருக்கவில்லை என்று தெளிவாகத் தெரிகிறது எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

குடாநாட்டிலுள்ள மக்களை குடியமர்த்த வன்னிக்காட்டிலுள்ள புலிகளின் ஆயுதங்களைக் கையளிக் கோருவது பொருத்தப்பாடற்றதென வலிகாமம் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தென்மராட்சி வணிகர் கழகங்களின் ஒன்றியம், தீவக மக்கள் நலன் காப்பகம், வலிகிழக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம், வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ சங்கம், அச்சுவேலி-ஆவரங்கால் வர்த்தகர் சங்கம், வலி.வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் என்பனவும் நம்பியாரின் அறிக்கைக்கு எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

## யுத்தநிறுத்தம் பற்றி கருணா - ஒஸ்ரின் இன்று சந்திப்பு

யுத்தநிறுத்தம் அமுலாக்கப்படுகின்ற விதம் குறித்து ஆராய்வதற்காகவும், யுத்த நிறுத்த மீறல்கள் பற்றி கலந்துரைடல்களை நடத்துவதற்காகவும் விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணாவும், பர்துகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் இன்று சந்திக்கவுள்ளனர்.

மட்டக்களப்பு - வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தச்சந்திப்பில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டேயும் கலந்து கொள்வார்.

## போராளி சாவு

(யாழ்ப்பாணம்)

சுகயீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போராளி ஒருவர் நேற்று முன்தினம் சாவடைந்தார்.

யாழ்ப்பாணம் கைதடி கிழக்கை சேர்ந்த வீரவேங்கை இளங்கீரன் (செல்வராஜா மகநந்தன்) என்ற போராளியே இவ்வாறு சாவடைந்தவராவார். (ரா)

### போரால்...

காணாமற்போனோர் தொடர்பாக எதுவிதமான முடிவுகளும் எட்டப்படாத நிலையில் அவர்களின் சொத்துக்களை கைமாற்றுவதிலுள்ள பிரச்சினைகளுக்கு எப்படித் தீர்வு காண்பது என்ற கேள்வியும் இந்தக் கூட்டத்தில் எழுப்பப்பட்டது.

இதன் அடுத்த அமர்வுகள்- பெப்ரவரி மாதம் 10 ஆம், 15 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. (ச)

## 'வீரம் விளை நிலம்' பலகையை மீண்டும் பொலிஸார் பிடுங்கினர்

மட்டக்களப்பு பிள்ளையாரடிப் பகுதியில் நாட்டப்பட்டிருந்த 'வீரம் விளை நிலம் அன்புடன் அழைக்கின்றது' என்ற பதாகை பொலிஸாரால் மீண்டும் பிடுங்கப்பட்டுள்ளது.

இந்தப்பாதை கடந்த திங்கட்கிழமை பொலிஸாரால் பிடுங்கப்பட்டு பின்னர் மக்களால் பறிக்கப்பட்டு மீண்டும் நடப்பட்டிருந்தது.

இந்தப் பதாகையை நேற்று அதிகாலை அந்தப் பகுதிக்கு சென்ற பொலிஸார் மீண்டும் அதனை பிடுங்கியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.(ச)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.53 | 96.97 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 158.50 | 159.92 |
| 1 யூரோ | 104.47 | 105.72 |
| 1 சுவிஸ் பிராங் | 71.02 | 72.09 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 56.56 | 57.55 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.82 | 25.82 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.